Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, AUGUST 14, 2021

சனிக்கிழமை ஒகஸ்ட் 14, 2021 | ஒளி: 07 கதிர்: 74 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | விலை ரூ.10

## நல்லூர் வருவதை தவிருங்கள்

■ என்.ராஜ்



நல்லூர் கோவிலுக்குள் செல்வதற்கு எவருக்கும் அனுமதியளிக்கப்படாது. ஆகையால், நல்லூர் கோவிலுக்கு வருவதை தவிர்த்துக்கொள்ளுங்கள் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லியனகே தெரிவித்தார்

நல்லூர் உற்சவம் நேற்று (13) ஆரம்பமானது.

தொடர்ச்சி P2

## தொற்றா நோயாளர்கள் குறித்து கவனம் செலுத்தவும்



நாட்டை முழுமையாக முடக்குவதற்கு எவ்விதமான தீர்மானமும் எடுக்கவில்லையெனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 60 வயதுக்கு மேற்பட்ட நீண்டநாள் தொற்றா நோயாளர்களாக இனங்காணப்பட்டவர்கள் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

## முற்றாக போக்குவரத்து தடை: சான்றிதழ் கட்டாயம்




கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக, மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து முழுமையாக தடைச் செய்யப்பட்டுள்ளது என அறிவித்துள்ள கொவிட்-19 செயலணியின் பிரதானி இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா, இந்த நடைமுறை நேற்று (13) நள்ளிரவு முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது என்றார். இதேவேளை, கொரோனா தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுக்கொண்டமைக்கான சான்றிதழ் இன்றி, பொது இடங்களுக்குள் நுழைவதற்கு அனுமதியளிக்கப்படாது. இந்த நடைமுறை செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் அமலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஒகஸ்ட் 21 கறுப்பு கொடி தினம்



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முறையாக விசாரணைகளை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒகஸ்ட் 21ஆம் திகதி கறுப்பு கொடி தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான அறிவிப்பை கொழும்பு பேராயர் கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று (13) விடுத்தார்.

தொடர்ச்சி P2

‘உயிர்களைப் பாதுகாப்பதற்கு தற்போது இருந்தே செயற்படுங்கள்’:

# 18 ஆயிரம் உயிரிழப்புகளைத் தடுக்கலாம்

### உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து எதிர்பாராதளவுக்கு பரிந்துரைகள்

சுகாதார நெருக்கடி ஒன்றை இலங்கை எதிர்கொள்ளும் என இலங்கை தொடர்பான உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர் குழு எச்சரித்துள்ளது.

தற்போதைய அதிவிரைவான கொரோனா வைரஸ் பரவலே மேற்குறிப்பிட்டதை இனங்காட்டுகின்றது என்றும் அக்குழு தெரிவித்துள்ளது.

மக்களுக்கு போதுமான கவனிப்பை வழங்குவதற்கு தேவையான சுகாதாரக் கட்டமைப்பு தற்போதைய கொரோனா வைரஸ் பரவலினால் மீறியுள்ளதாக இவ்வாரச் சந்திப்பொன்றில் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போதைய நடமாட்டம்/கட்டுப்பாடுகளால் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாரின் எண்ணிக்கையானது அடுத்த மாத நடுப்பகுதியில் நாளொன்றுக்கு 6,000ஆக உயரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர, இவ்வாண்டு ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் உயிரிழப்புகள் நாளொன்றுக்கு ஏறத்தாழ 220ஆக அதிகரிக்கும் என்பதுடன், ஒக்டோபர் ஆரம்பத்தில் தீவிர சிகிச்சை பிரிவில் இருப்போர் எண்ணிக்கை 275 என உச்சம் தொடும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நாட்டைத் திறந்து வைத்து பாதுகாப்பாக இருப்போம்



நாட்டை முழுமையாக மூடுங்கள், மூடுகள் எனக் கூறுபவர்கள் மாற்றுவழிமுறைகளை கூறவில்லையெனத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, ஏற்றுமதி வருமானம் குறையுமாயின், நோயாளியொருவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதிலும் பிரச்சினைகள் ஏற்படும்.

தொடர்ச்சி P2

## ஒட்சிசன் இறக்குமதி செய்ய தீர்மானம்



கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதால், அவர்களுக்கு தேவையான ஒட்சிசனை இறக்குமதி செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

## கிளிநொச்சியில் திடீரென விழுந்து ஒருவர் மரணம்

■ எஸ். பாஸ்கரன்

கிளிநொச்சியில் பிரதேச சபையில் பணியாற்றும் வெளிக்களத் தொழிலாளியான விஜயகுமார், (வயது 47) சைக்கிளில் பயணித்துகொண்டிருந்த போது, திடீரென மயங்கிவிழுந்து மரணமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கைக்குண்டு விற்க முயன்றவர் கைது

■ கனராசா சரவணன்



அம்பாறை, திருக்கோவிலில் இருந்து மட்டக்களப்பு, காத்தான்குடி பகுதிக்கு கைக்குண்டு ஒன்றை விற்பனைக்கு எடுத்து சென்ற விநாயகபுரத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை களுவாஞ்சிக்குடி நகர்பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் நேற்று வெள்ளிக்கிழமை (13) பிற்பகல் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



நல்லூரானை தரிசிக்க வந்தவர்கள்

## நடுவீதியில் கற்பூரம் கொளுத்தி வழிபாடு

■ எம்.றொசாந்த்



நல்லூரானை தரிசிக்க வந்த அடியவர்கள் பொலிஸார் முன்னிலையில் நடுவீதியில் தேங்காய் உடைத்து, கற்பூரம் கொளுத்தி, மலர் தூவி வணங்கிச் சென்றனர்.


நல்லூரான் கொடியேற்றம் நேற்று (13) நடைபெற்றது. அந்நிகழ்வை நேரில் கண்டு, நல்லூரானை வணங்கிச் செல்ல வந்த பக்தர்களை கோவில் சூழலுக்குள் அனுமதிக்க பொலிஸார் மறுத்தனர். இதனையடுத்து பக்தர்கள் நடுவீதியில் அமர்ந்துகொண்டனர்.

நல்லூரானுக்கு உடைக்க கொண்டு வந்திருந்த சிதறு தேங்காயை, கொடியேற்ற நிகழ்வு முடிவடைந்ததும், பொலிஸாருக்கு முன்பாக நடுவீதியில் உடைத்து, நடுவீதியிலேயே கற்பூரம் கொளுத்தி, நல்லூரானுக்கு தூவக் கொண்டு வந்திருந்த மலர்களை வீதியில் தூவி, வீதியிலையே விழுந்து வணங்கி சென்றனர்.

நல்லூர் கோவில் முன்வாசலில் கோவில் நிர்வாகத்தினரின் உத்தரவில் பொலிஸாரின் பஸ் நிறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## அரோஹரா




நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று (13) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களை கொண்டே திருவிழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (என். ராஜ், எம். றொசாந்த்)

## ஹிஷாலியின் சடலம் மீண்டும் நல்லடக்கம்

■ ஆ.ரமேஸ், எஸ்.கணேசன், துவாரக்கஷான்.

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதுயுதீனின் கொழும்பு வீட்டில் பணியாற்றியபோது எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில், மரணமடைந்த டயகமவைச் சேர்ந்த 16 வயதான சிறுமி ஜூட்குமார் ஹிஷாலியின் சடலம், இரண்டாவது தடவையாக நேற்று (13) மாலை 6.57 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

## தரவுகளை மூவரே மறைப்பதாக ஆளும் கட்சி எம்.பி குற்றச்சாட்டு



கொரோனா தொற்றாளர்கள் தொடர்பிலான தரவுகள் மாற்றப்பட்டு, மறைக்கப்படுகின்றன என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் ஆளும் கட்சியின் எம்.பியுமான மொஹமட் முஸ்ஸமில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மங்கள, பிரசன்ன, பிரமித மூவருக்கும் கொரோனா



பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த நெருங்கிய ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்தே அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில், முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதியாகியுள்ளது.

## உள்ளே

P3. பதுக்கியவை எப்போது எட்டிப்பார்க்கும்?
P4. ‘வேலா’க்கள் எங்கே போய்விட்டன?
P5. பாலியல் குற்றங்கள்
P7. கசக்கும் இனிப்பு
P8. அரிசி மலை இரகசியம்

PAGE 1 தொடர்ச்சிகள்

# தொற்றா நோயாளர்கள் குறித்து கவனம் செலுத்தவும்

அத்துடன், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மீது அதிக கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

கொவிட்-19 செயலணியின் வாராந்த சந்திப்பு, நேற்று (13) நடைபெற்றது. இதன்போது, கொரோனா தொற்றால் மரணமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள். அத்துடன், அவர்களில் பலர், நீண்ட நாள்களாக தொற்றா நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தும் உள்ளனர் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஒரு முழுமையான ஊரடங்கை அமுல்படுத்த இதுவரை அரசாங்கத்தில் ஒருமித்த கருத்து இல்லை, ஏனெனில், இது தினசரி ஊதியம் பெறுபவர்களையும் பெரும்பாலான அரசு ஊழியர்களையும் கடுமையாக பாதிக்கும். ஒரு குறுகிய பூட்டுதல் கூட மீட்க முயற்சிக்கும் பொருளாதாரத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

# முற்றாக போக்குவரத்து தடை: சான்றிதழ் கட்டாயம்

இதுதொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார, துறைமுக, விமான நிலைய உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோர், விவசாய கைத்தொழில், முதலீட்டு சபை உள்ளிட்ட அனுமதியளிக்கப்பட்ட கைத்தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களுக்கு மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்து செய்வதற்கு அனுமதியளிக்கப்படும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறைகளின் பணியாட் தொகுதியில், மாகாணங்களுக்கு வெளியிலிருந்து பணியாளர்களை அழைப்பதற்கான அதிகாரம் நிறுவனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டள்ளது. தனியார் துறை நிறுவனங்களில் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக பணியாளர்களை கடமைக்கு அழைக்கலாம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லூர் வருவதை தவிருங்கள்

அதற்கான, பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவம் 25 நாள்கள் நடைபெறவுள்ளது. கொரோனா நிலைமை மிகவும் தீவிரமாக காணப்படுகின்றது . திருவிழாக்கள் நடாத்துவது தொடர்பில் சுகாதார அமைச்சினால் சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய செயற்படவேண்டும்.

அந்த சுற்றி நிரூபங்களுக்கு அமைவாக யாழ்ப்பாண மாநகரசபை ,ஆலய நிர்வாகம் மற்றும் பொலிஸார் இணைந்து திருவிழாவை, பாதுகாப்பான முறையில் எவ்வாறு நடாத்துவது தொடர்பில் கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுத்துள்ளோம்

அந்த முடிவின் பிரகாரம், ஆலய நிர்வாகத்தினரால் அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்போர் மாத்திரம் நல்லூர் ஆலய வளாகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் வேறு எவருக்கும் அனுமதி வழங்கப்படாது என்றார்.

தொற்று நிலைமையை கருத்திற் கொண்டு ஆலயத்துக்கு வருவதை பொதுமக்கள் தவிர்த்து கொள்ளுங்கள், வீடுகளில் இருந்தவாறு நேரடியாக ஒளிபரப்பப்படும் ஆலய உற்சவத்தை தரிசியுங்கள் தரிசிப்பதன் மூலம் தொற்று நிலைமையிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றார்.

# நாட்டை திறந்து வைத்து பாதுகாப்பாக இருப்போம்

அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகள் ஒருமாதமேனும் நாட்டை முழுமையாக முடக்கி வைத்திருக்கும். ஏனெனில், அந்த நாடுகளில் வெளிநாட்டு கையிருப்பு அதிகளவில் உள்ளது. எம்மை பொறுத்தவரையில், ஏற்றுமதி செய்தால் மட்டுமே அமெரிக்க டொலர்களை ஈட்டமுடியும்.

கொழும்பில் நேற்று (13) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், நாட்டை முற்றாக முடக்கினால் ஏற்றுமதி தொழில்துறைகள் முழுமையாக பாதிக்கப்படும். இதனால், டொலர்களை ஈட்டுவது கடினம், வெளிநாட்டு கையிருப்பு குறைந்துகொண்டே செல்லுமாயின், எரிபொருள் கொள்வனவு செய்யமுடியாது என்றார்.

எரிபொருள்களை கொள்வனவு செய்யமுடியாவிடின், நோயாளி ஒருவரை, வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வது கடினம். ஆனால், நாட்டை மூடுங்கள், முடக்குங்கள் என ஒருசில தரப்பினர் கூறுகின்றனர். அவ்வாறானவர்களிடம் மாற்று கருத்துகுள் இல்லை.

ஆகையால், நாட்டை திறந்து வைத்துகொண்டே, சுகாதார நடைமுறைகளை பின்பற்றி, வருமானத்தை ஈட்டும் வழிகளை துரிதப்படுத்தவேண்டும். வெளிநாட்டு கையிருப்பு குறையும் போது, பாரிய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றார்.

# 18 ஆயிரம் உயிரிழப்புகளைத் தடுக்கலாம்

அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் ஏறத்தாழ 30,000 உயிரிழப்பர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், நடமாட்டம், சமூகக் கட்டுப்பாடுகள் இவ்வாண்டு மே/ஜூன் மாதம் போல நான்கு வாரங்களுக்கு அதிகரிக்கப்பட்டால், தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது நாளொன்றுக்கு 1,000ஆகக் குறைவடைவதுடன், உயிரிழப்புகள் இவ்வாண்டு ஒக்டோபர் மாதமளவில் 25க்கு குறைவாக இருக்கும் எனவும், தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்போர் நாளொன்றுக்கு 25ஆக இருக்கும் எனவும் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆக, அடுத்தாண்டு ஜனவரி மாதத்துக்கிடையில் 18,000 உயிர்களைப் பாதுகாக்கலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

> **அத்தியாவசிய சேவை தவிர்ந்த மாவட்டத்துக்கு இடையேயான பயணம் உள்ளிட்ட நடமாட்டங்களை கடுமையாகக் கட்டுப்படுத்தல். இதை அமுல்படுத்த குறுகிய காலத்துக்கு ஊரடங்கு ஒன்றை பாரிய அல்லது தேசிய ரீதியாக அமுல்படுத்தல்**

பின்வருவனவே பிரதானமான பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன,

அத்தியாவசிய சேவை தவிர்ந்த மாவட்டத்துக்கு இடையேயான பயணம் உள்ளிட்ட நடமாட்டங்களை கடுமையாகக் கட்டுப்படுத்தல். இதை அமுல்படுத்த குறுகிய காலத்துக்கு ஊரடங்கு ஒன்றை பாரிய அல்லது தேசிய ரீதியாக அமுல்படுத்தல்.

அனைத்து பொது நிகழ்வுகளையும் மூன்று வாரங்களுக்கு கட்டுப்படுத்தல்/நிறுத்துதல்.

அத்தியாவசிய சுகாதார சேவைகளை மட்டுப்படுத்தி சுகாதாரப் பணியாளர்களை பாதுகாத்தல்.

கட்டுப்பாடுகளை பொதுமக்களுக்கு இற்றைப்படுத்துவதற்கான பயனுள்ள தொடர்பாடல் திட்டம்.

தொற்றுக்குள்ளானோரை, உயிரிழந்தோரை அறிக்கையிட்டு நிலைமை தொடர்பாக துல்லியமாக விளக்கமளித்தல்.

60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்புமருந்தேற்றுதலை முன்னுரிமையளித்தல். குறிப்பாக பைஸர், மொடெர்னா அல்லது அஸ்ரஸெனக்கா செலுத்துதல். ஏனெனில், இவற்றின் முதலாவது தடுப்பூசி குறிப்பிடத்தள்ளவு பாதுகாப்பை, இரண்டாவது வழங்கப்படும் வரை அளிக்கும்.

# ஓகஸ்ட் 21 கறுப்பு கொடி தினம்

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஜூலை 13 ஆம் திகதியன்று தான் எழுதிய கடிதத்துக்கும் சரியாக பதிலளிக்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.

# ஒட்சிசன் இறக்குமதி செய்ய தீர்மானம்

இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இருந்தே ஒட்சிசன் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன் முதலாவது கட்டமாக 20 மெற்றிக் தொன் ஒட்சிசன் அடங்கிய 6 கொள்கலன்களை நாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரையில் இரண்டு உள்நாட்டு உற்பத்தியாளர்கள் நாட்டுக்குத் தேவையான ஒட்சிசன் தேவையை பூர்த்தி செய்கின்றனர் என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# கிளிநொச்சியில் திடீரென விழுந்து ஒருவர் மரணம்

மதிய உணவுக்காக சென்று கொண்டிருந்த போதே, இவ்வனர்த்தம் ஏற்பட்டது. இதனால், அங்கு பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. கிளிநொச்சி- திருநகர் வீதியில் அரச நில அளவைத் திணைக்களத்துக்கு அண்மித்த பகுதியில் அவர், மயங்கிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

# நடுவீதியில் கற்பூரம்...

இதனால் நல்லூர் ஆலய வளாகத்துக்குள் பக்தர்களுக்கு செல்லமுடியவில்லை. பெரும் எண்ணிக்கையிலான பொலிஸாரும் கடமையில் இருந்தனர். இதனால், பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் சிறு முறுகல் நிலையும் தோன்றி மறைந்தது.

# தரவுகளை மூவரே மறைப்பதாக...

இராணுவத்தின் உயர் அதிகாரியொருவரும் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் விசேட வைத்தியர்கள் இருவருமே இவ்வாறு தரவுகளை மறைக்கின்றனர் எனத் தெரிவித்த அவர், இராணுவத்தளபதிக்கு தேவையாயின் அந்நபரை தேடி இனங்கண்டுக்கொள்ள முடியும் என்றார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று (13) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கைக்குண்டு விற்க முயன்றவர் கைது

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவினர் இவரை கண்காணித்து வந்துள்ளனர். வீட்டில் இருந்து மோட்டர் சைக்கிளில் மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்துக்கு பயணித்துள்ளார். அவரை புலனாய்வுப் பிரிவினர் பின் தொடர்ந்துள்ளனர்.

புலனாய்வு பிரிவினர் பின் தொடர்வதை கண்டுகொண்ட அவர், தான் எடுத்துவந்த குண்டை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கும் பொலிஸ் விடுதிக்கும் இடையிலான பிரதான வீதியில் பிற்பகல் 1.30 மணியளவில் வீசியெறிந்துவிட்டு தப்பியோட முயற்சித்துள்ளார். இதன்போதே மடக்கி பிடித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை சேர்ந்த புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியாவார்.

டயலொக் அழைப்பு கிரிக்கெட் தொடர்:

# பச்சை அணியை வென்ற சாம்பல் அணி




இலங்கை கிரிக்கெட் சபையின் டயலொக் அழைப்பு இருபதுக்கு 20 லீக் கிரிக்கெட் தொடரின் ஆரம்பப் போட்டியில், இலங்கை கிரிக்கெட் சபையின் பச்சை அணியை சாம்பல் அணி வென்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சாம்பல்

சாம்பல்: 167/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: தசுன் ஷானக 84 (41), சத்துரங்க டி சில்வா 23 (21), மினோத் பானுக 21 (20), புலின தரங்க ஆ.இ 16 (16), மிலிந்த சிரிவர்தன 12 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுமிந்த லக்ஷன் 1/26 [4], ரமேஷ் மெண்டிஸ் 0/7 [2], லக்ஷன் சந்தகான் 1/34 [4])

பச்சை: 166/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கமிந்து மெண்டிஸ் 74 (48), பத்தும் நிஸங்க 45 (36), இஷான் ஜயரத்ன ஆ.இ 20 (10), சம்மு அஷான் ஆ.இ 10 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: புலின தரங்க 3/22 [4], அஷியான் டேனியல் 2/23 [3], நுவான் பிரதீப் 1/32 [4], சத்துரங்க டி சில்வா 0/14 [2])

# ஹிஷாலியின் சடலம் மீண்டும் நல்லடக்கம்

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நுவரெலியா நீதிமன்ற நீதவான் திருமதி லுசாக்காகுமாரி தர்மகீர்த்தி முன்னிலையில் மூன்று சிரேஸ்ட சட்டவைத்தியர்கள் ஊடாக சிறுமி ஹிசாலினியின் உடல் அடங்கிய சவப்பெட்டி ஜூலை மாதம் (30) ஆம் திகதி பகல் 12.20 மணிக்கு டயகம மேற்கு தோட்ட சவக்குழியிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டது.

இரண்டாவது முறையாக சிறுமியின் சடலத்தை பிரேத பரிசோதணைக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதனடிப்படையில் தோண்டப்பட்ட சடலம், பேராதனை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தரகர் ஒருவரினால் ரிஷாட்டின் வீட்டுக்கு அச்சி சிறுமி பணிக்கு அமர்த்தப்பட்டார். இந்நிலையில், தீ காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஜூலை (03)ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். 72 சதவீதமான எரிகாயங்களால், சிகிச்சை பலனின்றி ஜூலை (15) ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து சிறுமியின் மரணம் நாட்டில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்ததுடன் சிறுவர் தொழிலாளி தீமூட்டி கொல்லப்பட்டார் என மலையகம் உள்ளிட்ட நாட்டில் பல பிரதேசங்களிலும் பேசும் பொருளாக மாறியிருந்தது.

சிறுமிக்கு நீதி கிடைக்க வேண்டும் எனக்கோரி மலையகம் உள்ளிட்ட நாட்டில் பல பிரதேசங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றன.

இந்த நிலையில் சிறுமி எவ்வாறு உயிரிழந்தார்,இதற்கு பொறுப்பு யார்,சிறுமிக்கான துன்பறுத்தல்,பாலியல் வன்புணர்வு என பல கோணங்களில் விசாரணைகள் தனி பொலிஸ் குழுவொன்று அமைத்து விசாரிக்கப்படுகின்றனது.

இதன்போது சந்தேக நபர்களாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் மனைவி,மாமனார் மற்றும் தரகர் ஆகியோர் கைது செய்யப்பட்டு விசாரித்த நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவ்வீட்டில் பணியாற்றிய மற்றுமொரு பணிப்பெண்ணை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகிக்கிய குற்றச்சாட்டின் கீழ், ரிஷாட் பதியுதீனின் மைத்துனர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தனது மகளின் மரணத்தில் சந்தேகம் உள்ளதென சிறவர் உரிமைகள் பாதுகாப்பு அதிகார சபைக்கும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் சிறுமியின் பெற்றோர் முறையிட்டிருந்தனர்.

இதற்கமைய கொழும்பு மேலதிக நீதவான் ரவீந்திர ஜயசூரிய முன்னிலையில் சிறுமி ஹிஷாலினியின் மரண சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல், சிறுமியின் சடலத்தை தோண்டி மீண்டும் இரண்டாவது பிரேத பரிசோதணைக்கு உட்படுத்த வேண்டும் என நீதிமன்றிடம் கேட்டிருந்தார்.

அதற்கமைய சடலம் தோண்டப்பட்டு இரண்டாவது தடவையாக பிரேத பரிசோனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன்பின்னர், 15 நாள்களுக்கு பின் நேற்று(13)ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.25 மணிக்கு மலர்சாலை வாகனத்தில் டயகம மேற்கு தோட்ட மயானத்திற்கு கொண்டுவரப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஊர்மக்கள்,உறவினர்கள் மத்தியில் கண்டி மற்றும் டயகம பிரதேச கிறிஸ்தவ சமய குருமாரின் ஜெப வழிபாடுகளுடன் அதே புதைக்குழியில் மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது

# பதுக்கியவை எப்போது எட்டிப்பார்க்கும்?





மகேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com

**ஏதாவது ஒரு பொருளுக்கு, விலையை அதிகரிக்க வேண்டுமென்ற தீர்மானம், சம்பந்தப்பட்ட தரப்புகளால் எடுக்கப்படுகின்ற போதே, அந்தப் பொருட்களை மறைத்து, நுகர்வோரை திணறடிக்கும் விளையாட்டு, இலங்கையில் ஒரு வழக்கமாகக் காலம் காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.**

இது வர்த்தகர்களின் வர்த்தக உத்தியாக இருந்தாலும், பாதிப்பு என்பது நுகர்வோரைத் தவிர எவருக்கும் இல்லை. அந்தவகையில், நாட்டில் உரம், சமையல், எரிவாயு, அத்தியாவசியப் பொருள்கள் பற்றாக்குறை என நீண்டு செல்லும் பட்டியலில், பால்மாவும் தற்போது இடம்பிடித்துள்ளது.

"அதிக செலவில் பொருட்களை இறக்குமதி செய்கிறோம்; எனவே, இறக்குமதி செலவைக் கட்டுப்படுத்த, பொருட்களின் விலையை அதிகரித்தேயாக வேண்டும்" என்று ஒற்றைக்காலில் நின்று, தாம் நினைத்தைச் சாதித்து விடும் வர்த்தக சமூகம், தாம் பதுக்கிய பொருள்களுக்குக் கொள்ளை இலாபத்தை ஒரே நாளில் ஈட்டிவிடுவர்.

ஆனால், பதுக்கினாலும் விலை அதிகரித்தாலும் பாதிக்கப்படும் ஒரே தரப்பு நுகர்வோர் மாத்திரமே. இதற்கமைய, இலங்கையில் கடந்த சில வாரங்களாக பல அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், இரண்டு பொருட்கள் குறித்தே அதிகமாகப் பேசப்பட்டன; இன்றும் பேசப்படுகின்றன.

அதாவது, சமையல் எரிவாயு, பால்மா ஆகியவற்றுக்கான தட்டுப்பாடு ஆகும். (தட்டுபாடு என்று கூறுவதை விட பதுக்கல் என்பது சாலப் பொருந்தும்) இதனால், நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்புக்கு, அரசாங்கம் அனுமதியளித்ததால், இனிமேல் சமையல் எரிவாயு, தயக்கம் இல்லாமல் வெளியே தலைகாட்டும் என்பதால் அதைவிடுத்து, பால்மாப் பிரச்சினைக்குச் செல்லுவோம்.

உலக வர்த்தக சந்தையில் பால்மா விலை அதிகரிப்பு, கப்பல் கட்டணம் அதிகரிப்பு, டொலருக்கான பற்றாக்குறை என்பவற்றைக் காரணம் காட்டி பால்மா இறக்குமதியாளர்கள், தற்போது 945 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மாவின் விலையை 1,300 ரூபாய்க்கும் 380 ரூபாய்க்கு விற்பளை செய்யப்படும் 400 கிராம் பால்மாவை 495 ரூபாயாகவும் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்தாலும் அரசாங்கம் இதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை. இதனால், பால்மா இறக்குமதியை 70 சதவீதமாகக் குறைக்க தீர்மானம் எடுத்த மறுகணமே, சாதாரண பெட்டிக்கடை தொடக்கம் பல்பொருள் அங்காடிகளின் இறாக்கைகளை அழகுபடுத்திய பால்மாக்கள் காணாமல் போய்விட்டன.

ஆனால், "துறைமுகங்கள், விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. எனவே, இந்த இக்கட்டான நிலையில், பால்மா விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப் போவதில்லை" என நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சும் வர்த்தக அமைச்சும் பிடிவாதம் பிடித்து வருகின்றன.

இவ்வாறு, பால்மாத் தட்டுப்பாடு தொடர்பில், சிறு குழந்தை கூட அறிந்திருக்கும் நிலையில், கடந்த ஐந்தாம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை சந்திப்பின் போது, ஊடகவியலாளர் ஒருவர், நாட்டில் பால்மா தட்டுபாடு ஏற்பட்டுள்ளமை தொடர்பில் வினவியதற்கு

**அந்நிய செலாவணி பற்றாக்குறையே இந்த நெருக்கடிக்குக் காரணம். எனவே, வெகு சீக்கிரமாக அந்நிய செலாவணி நெருக்கடிக்கு, தீர்வைக் கண்டுபிடிப்பது அவசியம்**

அமைச்சரவை இணைப்பேச்சாளர்களுள் ஒருவரான ரமேஸ் பத்திரண, அவ்வாறான எந்தவொரு தகவலும் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என கூறியமை வேடிக்கையாகவே பார்க்கப்பட்டு இதை வைத்து மீம்ஸ்களும் சமூக வலைத்தளங்களில் உலாவந்தன.

இதாவது பரவாயில்லை! சில நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் அதிகளவு பொருட்களை அல்லது குறிப்பிட்ட சில பொருட்களை கொள்வனவு செய்தால் மாத்திரமே, ஒரு பக்கட் பால்மா தரப்பட்டதாகவும் அறியக்கிடைக்கின்றது.

எனவே, இந்தப் பால்மா தட்டுப்பாடு தேநீர் பிரியர்களை விட, குழந்தைகளையே பெருமளவில் பாதித்துள்ளது. பெரும்பாலும் தொழிலுக்குச் செல்லும் தாய்மாரின் குழந்தைகளின் பசியை, பால்மாக்களே போக்குகின்றன. ஆனால், இன்று அதற்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இரு தரப்பினரின் பிடிவாதத்துக்கு மத்தியில், அரசாங்கம் இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான இறக்குமதி வரியை முழுமையாக நீக்கியதுடன், தற்போதுள்ள பால்மா இறக்குமதிக்கான வரியைத் திருத்தம் செய்வதன் மூலமோ அல்லது, வேறு பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமோ போதியளவு பால்மாவை உள்ளூர் சந்தையில் விநியோகிப்பதை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதிஅமைச்சருக்கு அதிகாரத்தையும் வழங்குவதாக அமைச்சரவை தீர்மானத்தை அறிவித்தது.

ஆனால், "இறக்குமதி வரி முழுமையாக நீக்கப்பட்டாலும் நாம் கோருவது விலை அதிகரிப்பையே; ஏனெனில், ஒரு கிலோகிராம் பால்மாவை இறக்குமதி செய்ய 1,200 ரூபாய் செல்லும் போது, 900 ரூபாய்க்கு எவ்வாறு விற்பனை செய்வது" என, பால்மா இறக்குமதியாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இலங்கையின் அன்றாட பால்மா நுகர்வு 200 தொன் என்பதுடன், மாதம் 6,500 தொடக்கம் 8,000 தொன் வரை தேவைப்படுகின்றது. இதற்காக வருடாந்தம் 360 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் தான், தேசிய பால் உற்பத்தி குறித்து, சகலரிடத்திலும் கேள்வி எழுகின்றது. எதற்காக இத்தனை டொலரைச் செலவிட்டு, பால்மா இறக்குமதி செய்ய வேண்டும்? இந்தப் பணத்தில் தேசிய பால் உற்பத்தியை ஊக்குவித்தால், பால்மா இறக்குமதிக்காக அதிகம் செலவிடும் நிதியை சேமிக்க முடியாதா? என்பது நியாயமான கேள்விதான்.

"பரவாயில்லை பசுப்பால் குடியுங்கள். 'சூன்பான்' வாகனம் போல, காலையிலேயே உங்கள் வீடுகளுக்கு பால் வாகனம் வரும்" என அமைச்சர் ஒருவர் நக்கலடித்திருந்தார். அவ்வாறு அந்த அமைச்சர் கூறுவதைப்போன்று, நாட்டின் பசுப்பாலுக்கான தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு, தேசிய பால் உற்பத்தி இடம்பெறுகிறதா என்று, அந்த அமைச்சரிடம் தான் வினவ வேண்டும்.

ஏனெனில், எமது நாட்டில் நாளொன்றில் தனிநபர் பால் நுகர்வு 200 மில்லிலீற்றராகக் காணப்படும் நிலையில், தேசிய பால் உற்பத்தி 40 சதவீதமாக உள்ளது. மிகுதி 60 சதவீதம், இறக்குமதி செய்யப்படும் பால்மா மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றது.

"எமது தேசிய பால் உற்பத்தி 40 சதவீதமாகவே காணப்படுகின்றது. இவற்றை 100 சதவீதமாக அதிகரிக்க வேண்டும். அப்போதே நாட்டில் பாலுக்கான தன்னிறைவு காணப்படும். அதேவேளை, பால்மா இறக்குமதியையும் நிறுத்த முடியும். பாலில் தன்னிறைவு காணவேண்டும்; அவ்வாறு, பாலில் தன்னிறைவு காணவேண்டுமாயின் 2-3 வருடங்கள் காத்திருக்க வேண்டும். அதுவே, எமது இலக்கு" என, கால்நடை வளம், விவசாய மேம்பாடு, இராஜாங்க அமைச்சர் டீ.பீ. ஹேரத் அறிவித்தாலும், நுகர்வோரின் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு தான் என்ன?

இராஜாங்க அமைச்சர் டீ.பீ. ஹேரத் கூறுவதைப் போன்று, தேசிய பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமெனில், அதற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும். குறிப்பாக, நுவரெலியா மாவட்டத்தில் கால் நடை வளர்ப்பு மிகவும் அருகி வருகின்றது.

முன்பெல்லாம், மலையகத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் ஆடு, மாடு என கால்நடைகளை வளர்த்து வந்தனர். தமது பால் தேவையை இவர்களே பூர்த்தி செய்துகொண்டனர். இவர்கள் அப்போதைய ஆட்சியாளர்களால் ஊக்குவிக்கப்பட்டனர்.

ஆனால், இன்று தோட்டப்புறங்களில் கால்நடைகள் வளர்ப்பதற்காகப் பட்டிகளை அமைத்தாலே, அதற்கு எதிராக தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், எதற்காக வம்பு என, தோட்ட மக்களும் பால்மாவுக்கு அடிமையாகி, இன்று வர்த்தக நிலையங்கள் முன்பாக, ஒரு பக்கட் பால்மா கிடைக்காதா எனக் காத்துக்கிடக்கின்றனர்.

இதனால்தான், இன்றைய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையில், பேசாமல் தேநீரை நிறுத்திவிட்டு, கொத்தமல்லி, இஞ்சி போட்ட பானங்களை அருந்த பழகிக்கொள்வது சிறந்ததென, சிலர் மாற்றுவழியையும் யோசிக்கத் தொடங்கிவிட்டனர்.

ஆனால், 'மருந்தும் விருந்தும்' அதிகமானால் சிக்கலாகிவிடும். அது வேறு பக்கவிளைவுகளை ஏற்படுத்தி விடும் அல்லவா?

எனவே தான், இந்தப் பிரச்சினைக்கான தீர்வை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வணிக பீடத்தின் பேராசிரியர் ஜனக் குமாரசிங்க இவ்வாறு முன்வைத்துள்ளார். "இன்று தலைதூக்கியுள்ள பால்மா பிரச்சினைக்கான அடிப்படைப் பிரச்சினை, கடந்த காலம் முதல் தொடர்ச்சியாகக் காணப்படும் அந்நிய செலாவணி நெருக்கடியாகும். டொலர் கொடுத்து பால்மாவை, இலங்கைக்கு இறக்குமதி செய்ததும், அந்த டொலர் மூலம் கொண்டு வரப்படும் பொருட்களின் விலை, தேசிய சந்தையில் அதிகரித்துக் காணப்படுகின்றது. காரணம் இதற்கான செலவு அதிகமாகும். குறிப்பாக, அந்நிய செலாவணி பற்றாக்குறையே இந்த நெருக்கடிக்குக் காரணம். எனவே, வெகு சீக்கிரமாக அந்நிய செலாவணி நெருக்கடிக்கு, குறுகிய அல்லது நீண்டகால தீர்வைக் கண்டுபிடிப்பது அவசியம். இல்லையெனில், நாம் மேலும் பல பொருள்களின் நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரடும்" என எச்சரித்துள்ளார்.

ஆகவே, இவரின் எச்சரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்ப்பதே தற்போது தலைத்தூக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வாகும். ஆனாலும், மிகவும் நெருக்கடியான காலக்கட்டத்தில் விலை அதிகரிப்பு என்ற நியாயமற்ற கோரிக்கைக்கு இணங்கமாட்டோம் என வர்த்தகத்துறை அமைச்சர் கூறுவது, நுகர்வோருக்கான நிவாரணமாக அமைந்தாலும், சந்தையில் பால்மா இன்மையானது நுகர்வோருக்கே பாரிய அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், செலவுகள் அதிகரிக்கும் போது விலையேற்றமும் இயல்பானதே. ஆகவே, இரண்டும் ஒன்றிலொன்று தங்கியிருப்பதால் எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் எடுப்பதே சிறந்தது.






**கல்முனையில் இருந்து கதிர்காமத்தில் எரிந்த நெருப்பை அணைத்த சித்து விளையாட்டு**

# மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது

**இன்று சித்தானைக்குட்டி சுவாமிகளின் 70ஆவது குருபூஜை**



வி.ரி. சகாதேவராஜா




'சித்தருள் சித்தர்' சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 70ஆவது குருபூஜை இன்று (14) சனிக்கிழமையாகும்.

சித்தானைக்குட்டி சுவாமிகள், இந்தியாவின் இராமநாதபுரத்தின் சிற்றரசரின் மகனாக அவதரித்தார். இவரது இளமைப் பெயர் 'கோவிந்தசாமி' ஆகும். இந்த இராச்சியத்தில் ஏற்பட்ட பயங்கரத் தொற்று நோய் காரணமாக பலர் மாண்டனர்.

இக்கால கட்டத்தில், இரண்டு மகான்கள் நோயைத் தாமே ஏற்று பணியாற்றலாயினர். இப்புதுமையை அறிந்த சிற்றரசன் மகான்களை அழைத்து உபசாரம் செய்ய எண்ணம் கொண்டு, தனது மகனிடம் மகான்களை அழைத்து வருமாறு பணித்தான். தந்தையின் பணிப்பை ஏற்றுப் புறப்பட்ட கோவிந்தசாமி, இல்லமெல்லாம் தேடி அலைந்து, ஒரு குடிசையில் கண்டு, இருவரின் பாதங்களில் வணங்கி நின்றார்.

மகான்கள் கோவிந்தசாமியை கட்டியணைத்து ஆசி வழங்கினர். உள்ளம் துறவறத்தை நாடியதால், மகான்களுடன் இணைந்து நோயுற்ற மக்களுக்குப் பணியாற்றலானார்.

பூர்வீகத்தொடர்பு, ஈழம் நோக்கி ஈர்ந்திழுக்க தூத்துக்குடி சென்று கப்பலில் வருவதற்கான பயணச்சீட்டைப் பெறுவதற்கு அன்பர் ஒருவரை அனுப்பி வைத்தனர். இருவருக்கு மட்டுமே பிரயாணச் சீட்டு கிடைத்ததால் கோவிந்தசாமியை அக்கரையில் விட்டுவிட்டு, இரு மகான்களும் கப்பல் ஏறி கொழும்பு துறைமுகத்தை சென்றடைந்தனர்.

ஆனால், கூடிநின்ற மக்கள் கூட்டத்தில் கோவிந்தசாமி நிற்பதை கண்ணுற்ற மகான்கள், தங்கள் சீடனிடம் பொதிந்திருந்த பக்குவ நிலையை உணர்ந்து கொண்டவர்களாக, ஆச்சரியத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் விட்டுவிட்டார்கள். இச்செய்கை மூலம் சித்தராக அவர் பரிணமித்தார்.

1920இன் முற்பகுதியிலிருந்து ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் நடமாடித்திருந்து பித்தனாகவும் பேயனாகவும் தன்னை வெளிக்காட்டி, உள்ளன்புடன் நாடிவரும் அன்பர்களின் மனோநிலைக் கேற்ப அருளுரைகள், அற்புதங்கள் மூலம் மக்களை வழி நடத்தினார் ஜீவ சித்தர் சித்தானைக்குட்டி சுவாமிகள்.

சுவாமிகள், காரைதீவில் தனக்கென ஆச்சிரமம் அமைத்து தங்கியிருந்தார்கள். நடையாகவும் மாட்டு வண்டிகளிலும் சுவாமிகளைத் தரிசிப்பதற்கு வருபவர்கள் 'காவு'களில் உணவுப் பொருட்களையும் பிரியமான பண்டங்களையும் காணிக்கையாக வழங்குவார்கள். அவை அனைத்தும் அங்கு வரும் அடியார்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

சுவாமி, ஆடாத சித்தே இல்லை என்கின்ற அளவுக்குப் பல இடங்களில் தனது சித்து விளையாட்டை ஆடியிருக்கின்றார்கள். அவற்றுள் சில: கதிர்காமத்தில் முருகப்பெருமானல் அமிர்தத்துளி கிடைக்கப் பெற்றமை; சாண்டோ சங்கரதாஸை இரும்பரசனாக புகழ் பூக்கச்செய்தமை; கடலின் மேல் நடந்தமை; கல்முனை சந்தியிலிருந்து கதிர்காமத்தில் தீப்பிடித்த திரைச்சீலையை அணைத்தமை; கதிர்காமத் திருவிழாக் காட்சியை தனது உள்ளங்கையில் காண்பித்தமை; நஞ்சு ஊட்டப்பட்டும் தீயிட்டு எரித்த போதும் மீண்டும் எழுந்து நின்று சித்தாடியமை போன்ற பல சித்துகளைப் புரிந்துள்ளார். இவ்வாறு பெருமைமிகு சித்தானைக்குட்டி சுவாமிகள், 1951ஆம் ஆண்டு ஆடித்திங்கள் சுவாதி நட்சத்திர தினத்தன்று சமாதி நிலையை எய்தினார்.

இச்செய்தியைக் கேள்வியுற்ற அடியார்கள், நாலா திசைகளிலிருந்தும் காரைதீவு ஆச்சிரமத்தில் ஒன்று கூடினர். 'சித்தர் சேவா சங்கம்' அமைக்கப்பட்டு, சமாதி வைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

தான் சமாதியான பின்னர் 'தனது அடி வயிற்றிலிருந்து இரத்தம் பெருகு'மென்றும் அதன் பின்னரே சமாதி வைக்க வேண்டும் என்றும் ஏற்கெனவே சுவாமி கூறியபடி, மூன்றாம் நாள் அடி வயிற்றிலிருந்து இரத்தம் பெருகியது. நான்காம் நாள் பக்தர்களின் ஆராதனையுடன் சுவாமி, 'சமாதி' வைக்கப்பட்டார். காரைதீவு 03ஆம் குறிச்சியில் சித்தானைக்குட்டி புரத்தில் ஜீவசமாதி வைக்கப்பட்டது.

பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபையால் சமாதி ஆலயம் வழிநடத்தப்பட்டு வருகின்றது. இச்சபை வருடாவருடம் மீளமைக்கப்படுவது வழமையாகும். 1985,1987, 1990 காலப்பகுதியில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக இவ்வாலயம் சேதமாக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டு, ஆழிப்பேரலை அனர்த்தத்தால் அன்னதான மடம், காளியம்மன், முருகன், பிள்ளையார் கோவில்கள் உட்பட அனைத்து உடமைகளும் முற்றாக அழிந்தன. தற்பொழுது, பொதுமக்களின் பங்களிப்புடனும் இந்து கலாசார திணைக்களத்தின் உதவியுடனும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தில் அறநெறி வகுப்பு வெள்ளிகிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை, விசேட தினங்களில் பூசைகளும் நடைபெற்று வருகின்றன.



# சாணன் ஏற முழம் சறுக்கல்



சுப்பிரமணியம் பாஸ்கரன்

**இலங்கையின் வடகடல் பகுதிகளில் தொடரும் இந்திய இழுவைப் படகுகளின் எல்லை தாண்டிய மீன் பிடிகளால், வடபகுதி கடல் தொழிலாளர்கள் தினமும் பெரும் இழப்புகளையும் அழிவுகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.**

யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில், கடந்த இரண்டு வாரங்களில் மட்டும், இரண்டு கோடியே 13 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் நட்டத்தை நெடுந்தீவு கடற்றொழிலாளர்களுக்கு, இந்தியக் கடற்றொழிலாளர்கள் ஏற்படுத்தி உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

“நிம்மதியாக வாழவேண்டும்; எங்களுக்காக உழைக்க வேண்டும் என, பல இலட்சம் ரூபாய்க்குக் கடன்பட்டு, கடற்றொழில்களை ஆரம்பித்து, இன்று நாங்கள் கடனாளிகளாகவே இருக்கின்றோம். வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் இல்லை. பரம்பரை பரம்பரையாகக் கடற்றொழிலையே செய்து, அதன் மூலம் வருமானமீட்டி வாழ்ந்த நாங்கள், இன்று இந்தத் தொழில்களை கைவிட்டு, அரபு நாடுகளுக்கும் கொழும்புக்கும் வேலை தேடிச்செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது” எனக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டுக்கு முன்னைய காலத்தில், எவரிடமும் கையேந்தாதும் எவரது வருமானத்தையும் எதிர்பார்க்காதும் செல்வந்தர்களாக வாழ்ந்த கடற்றொழிலாளர்களின் வாழ்வு, இன்று கேள்விக்குறியான நிலையில் காணப்படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால், யுத்தத்தால் எனத் தொடர்ச்சியாக அழிவுகளையும் இழப்புகளையும் எதிர்கொண்டு, மீண்டும் ஒரு புதிய வாழ்க்கையை நோக்கிப் பயணிக்கத் தொடங்கிய மீனவர்கள், இன்று தங்களுடைய வாழ்வாதாரத்தொழிலை சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் செய்யமுடியாத நிலையில் தத்தளிக்கிறார்கள்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் ஒருபுறம்; வெளிமாவட்ட மீனவர்களின் தடைசெய்யப்பட்ட தொழில்முறைகள் மறுபுறம் என, இவர்களுடைய தொழில்கள் கேள்விக்குறியாக்கியுள்ளன.

இது தொடர்பில், மீனவ அமைப்புகள் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின்




வாழ்க்கை வேகமாக அழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்ந்து வரும் சுமார் 4,600க்கும் மேற்பட்ட கடற்றொழில் குடும்பங்கள், மாவட்டத்தின் 73 கிலோமீற்றர் நீளமான கடற்பகுதியில், 2,000க்கும் மேற்பட்ட படகுகளை வைத்தே கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இவர்களது தொழில் நடவடிக்கைகள், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள், தடைசெய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகள், வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறிய தொழில்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிக கடல்வளத்தைக் கொண்ட கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, சாலை ஆகிய பகுதிகளில், வெளிமாவட்ட மீனவர்களின் தொழில்களால், தமது தொழில்கள் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும், அரசு தமது வாழ்வாதாரத் தொழில்களுக்கு வழிவகைகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என, இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

1991களிலும் அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் அதாவது 2000ஆம் ஆண்டு வரைக்கும், தொடர்ச்சியான யுத்தப் பாதிப்புகளைக்கொண்டு தங்களுடைய தொழில்களைச் செய்யமுடியாத நிலையில் இருந்ததோடு 2002ஆம் ஆண்டுக்குப்பின்னர் ஏற்பட்ட ஓர் இடைவெளியில் தங்களுடைய தொழிலை மேற்கொண்டிருந்தனர்.

இதன் பின்னர், 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தின் காரணமாக, சகல தொழில் வளங்களையும் இழந்து, தங்களுடைய உறவுகளையும் இழந்து நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். தொடர்ந்து, 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போதும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

மீள்குடியேறிய இந்தக்கடற்றொழில் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக அவ்வப்போது அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வளங்கிய ஓரிரு வாழ்வாதார உதவிகளோடு வங்கிகளிலும் உறவினர் நண்பர்களிடமும் கடன்களைப் பெற்று, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தொழில் உபகரணங்களை கொள்வனவு செய்து, தங்களுடைய தொழில்களை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு கரையோரப்பகுதிகளில் தடைசெய்யப்பட்ட தொழில்முறைகள் அதாவது, நிபந்தனைகளை மீறிய அட்டைத் தொழில், வெளிச்சம் பாச்சுதல், சுருக்கு வலை பயன்படுத்தல், உழவு இயந்திரங்களைக் கொண்டு கரைவலை வளைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேறகொள்ளப்படுவதால் ஏராளமான கடற்றொழிலாளர்கள் தொழில் செய்யமுடியாதுள்ளனர்.

பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கடன்களைப் பெற்று, கடற்றொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்திருக்கின்றபோதும் உரிய முறையில் தொழில்களைச் செய்ய முடியாத சூழல் உருவாக்கப்பட்டிருக்கும் நிலையில், கடன்களை செலுத்தவும் குடும்பங்களினது வாழ்வாதாரத்துக்காகவும் வேறு தொழில்களை நாடிச்செல்கின்ற கட்டாயம் உருவாக்கப்படுகின்றது.

தங்களது வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழிலை நிம்மதியாகச் செய்வதற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்தித்தருமாறு, தொடர்ந்து மத்திய, மாகாண அரசுகளிடம் கோரிக்கையை விடுத்துவருகின்றபோதும் இதுவரை அதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும், நெடுந்தீவில் இவ்வாறான பாதிப்புகள் ஏற்படுத்தப்பட்டன என்பதற்கு அப்பால், இதற்கு முன்னரும் பலகோடி ரூபாய் பெறுமதியான தொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டதுடன் படகுகளும் சேதமாக்கப்பட்டன; மீனவர்களும் தாக்கப்பபட்டனர்.

அத்துமீறி எல்லை தாண்டி, சட்ட விரோத தொழிலில் ஈடுபட்ட நிலையில், இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 200க்கும் மேற்பட்ட படகுகள் புநகரி, இலவங்குடா, காரைநகர் ஆகிய இடங்களில் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

காரைநகர் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய மீன்பிடிப் படகுகளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாகப் பாரவையிட்ட போது, இந்தியக் கடற்றொழிலாளர்களால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள தமக்கு, குறித்த படகுகளை விற்பனை செய்து கிடைக்கின்ற பணத்தை வழங்குமாறு, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கோரிக்கை முன்வைத்திருந்தார்கள்.


கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு, நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாக விடுவிக்கப்பட்ட போதிலும், இந்தியக் கடற்றொழிலாளர்களால் எடுத்துச் செல்லாது, கைவிடப்பட்ட நிலையில் சுமார் 138 படகுகளும் 2018ஆம் ஆண்டு இலங்கையில் புதிய சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் கைப்பற்றப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட சுமார் 70 படகுகளும் இலங்கையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய இழுவைப்படகுகளால், வடக்கில் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு மேற்படி பறிமுதல் செய்யப்பட்ட படகுகளைக் கொண்டோ, அரசின் உதவிகள் மூலமோ இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுக்க, விரைவாக முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

முப்பது வருடகாலப் போரால் வீழ்ச்சி கண்டபோதும், தற்போது அவற்றில் முன்னேற்றத்துக்கான வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டு, மீனவக்குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுவே சகல தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.



# ‘வேலா’க்கள் எங்கே போய்விட்டன?






லஷத்தினி ராஜேந்திரம், இராமஜெயம் கோபிராஜ்

நீங்கள், எப்போதாவது 1.5 மீட்டர் நீளமான வால் போன்ற அமைப்பொன்று, 6 மீற்றர் நீளமான உடலுடன் இணைக்கப்பட்டதை போன்ற உயிரினத்தைப் பார்த்ததுண்டா?

அவ்வாறானதோர் உயிரினம் காணப்படுகின்றது என்ற செய்தி, திருகோணமலை மாவட்டம், குச்சவெளி என்ற கிராமத்தின் தூசி படர்ந்த பாதை வழியாக விரைவாகப் பரவியது.

அந்த விநோத உயிரினத்தைப் பார்வையிட, மிக வேகமாக அவ்விடம் மக்கள் கூட்டத்தால் நிரம்பியது. அது, அவர்களுக்குக் கடற்கன்னி அல்லது, ‘டிராகன்’ போல தோன்றியது. ஆனால், 2017 பங்குனியில் இதைப் பிடித்த மீனவரால் இயற்றப்பட்ட புனைகதை அல்ல!

இந்த அற்புதமான மீன், சரியாகக் கூறினால் இது ஒரு வகை திருக்கை மீன். (இதைத் தமிழில் ‘வேலா’, ‘இலுப்பா’ என்றும் சிங்களத்தில் ‘தெதி மோரா’ என்றும் அழைப்பர்). இவை கசியிழைய மீன் இனத்தைச் சேர்ந்தவை. இவ் வகுப்பு அனைத்து வகையான சுறா, திருக்கை இனங்களை உள்ளடக்குகின்றது. வேலா மீனின் வால், அதனது மண்டையோட்டில் இருந்தான நீட்சி, அதற்குத் தனித்துவமான அழகைக் கொடுக்கின்றது.

சில தசாப்தங்களுக்கு முன்னர், இவை இலங்கையில் பொதுவாகக் காணக்கூடிய மீன் இனமாகும். அவைகளின் ரோஸ்ட்ராகள் (*rostra*) கருவாடுகளை உலர்த்தும் போது, தொல்லை தரும் நாய்களை விலக்கி வைக்க அமைக்கும் வேலிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, வேலா மீன்களை இப்போது புகைப்படங்களில் மட்டுமே காண முடிகிறது, மேலும், அவை உடனடியாகப் பாதுகாக்கப் படாவிட்டால் நாட்டுப்புற கதைகளின் ஒரு பகுதியாக மாத்திரம் மாறக்கூடும்.

உலகளவில் ஐந்து வகையான வேலா இனங்கள் உள்ளன. அதோடு அவை அனைத்தும் ஐ.யூ.சி.என் இன் சிவப்பு பட்டியலில் (*IUCN Red List*) அச்சுறுத்தலுக்கு உள்ளானவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய, சுறா, திருக்கை மீன்கள் போலவே, இவையும் நீண்ட ஆயுள், மெதுவான வளர்ச்சி, தாமதமான முதிர்ச்சி, குறைந்த இனப்பெருக்க திறன் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. அவைகளின் ரோஸ்ட்ரா அனைத்து வகையான மீன்பிடி வலைகளிலும் சிக்கிக் கொள்கிறது. ‘ட்வாப் சோவ்பிஷ்’, ‘நெரோ சோவ்பிஷ்’ ஆகியவை ஆபத்துக்கு உள்ளானவை என்றும் ‘லார்ஜ்டுத் சோவ்பிஷ்’, ‘கிரீன் சோவ்பிஷ்’, ‘ஸ்மோல்டுத் சோவ்பிஷ்’ என்பன மிகவும் ஆபத்துக்கு உள்ளானவை எனவும் பட்டியலிடப்பட்டுள்ளன. *CITES* பட்டியல் காரணமாக, சர்வதேச வர்த்தகம் தடைசெய்யப்பட்டுள்ளது.

‘நெரோ சோவ்பிஷ்’, ‘லார்ஜ்டுத் சோவ்பிஷ்’, ‘கிரீன் சோவ்பிஷ்’ ஆகிய மூன்று இனங்களும் 1889 முதல் தேசிய உயிரினங்கள் சரிபார்ப்பு பட்டியல்களில் இடம்பெற்றுள்ளன. இருப்பினும், அவற்றை உறுதிப்படுத்த புகைப்பட ஆதாரங்கள் எதுவும் இல்லை.

வேலா மீன்கள் பற்றிய அறிவை விரிவுபடுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில், *Blue Resources Trust* டொக்டர் ரிமா ஜபாடோ (*Elasmo Project*) உடன் இணைந்து, *Tokyo Cement Group, the Pew Charitable Trusts, Marine Conservation Action Fund, and Ocean Park Conservation Foundation* ஆகியவற்றின் அனுசரணையில், எங்கள் குழு தீவு முழுவதும் 300 மீனவர்களிடம் நேர்காணல்களை மேற்கொண்டது.

எங்கள் தரவுகளின்படி, 50 வயதுக்கு மேற்பட்ட பெரும்பாலான மீனவர்கள் வேலா மீன்களைப் பிடித்திருந்தாலும், 30 வயதுக்கு உட்பட்ட அனைத்து மீனவர்களாலும் காட்டிய புகைப்படங்களிலிருந்து ஒன்றைக் கூட அடையாளம் காண முடியவில்லை. வேலா மீன்களைப் பார்த்த மீனவர்களில், அரைவாசி மீனவர்கள், 1992 முதல் ஒன்றைக் கூட காணவில்லை. 32 பேர் மட்டுமே, இதுவரை ஒரு வேலா மீனையாவது பிடித்திருக்கிறார்கள். பெரும்பாலான மீனவர்கள், மீன்வளர்ப்பு தொழில் துறையின் வளர்ச்சிக்கு முக்கியமான வாழ்விடங்களை அழித்தமையைக் காரணமாக கூறினர்.

வேலா மீன்களுக்கு கலாசார அல்லது பாரம்பரிய மதிப்பு இல்லாததையும் எங்கள் ஆய்வு வெளிப்படுத்தியது. இருப்பினும், தலவில தேவாலயம், சின்னகுண்டுவா தேவாலயம் ஆகியவற்றில் வேலா மீன்களின் ரோஸ்ட்ராக்களை நாங்கள் பார்வையிட்டோம். அங்குள்ள மீனவர்கள், தங்கள் முன்னோர்கள் ரோஸ்ட்ராக்களை நன்கொடையாக அளித்ததாகக் குறிப்பிட்டனர். அது அவர்களின் கடற்பயணங்களுக்கு பாதுகாப்பையும் அதிர்ஷ்டத்தையும் கொடுக்கும் என்று நம்பினார்கள்.

மிகையான மீன்பிடி அழுத்தம் காரணமாக, குடித்தொகை பெரிதும் குறைந்துவிட்டதை காட்டுவதால், இலங்கையில் வேலா மீன்கள் முழுமையாக பாதுகாக்கப்படுவதை நாங்கள் வலுவாக பரிந்துரை செய்கிறோம். இது மீதமுள்ள வேலா மீன்கள் இனப்பெருக்கம் செய்ய மற்றும் அவற்றின் சரிவை மீட்க வழிவகுக்கும்.

(கட்டுரையாளர்கள், ப்ளூ ரிசோர்ஸஸ் டிரஸ்ட் (*Blue Resources Trust*) யை சேர்ந்தவர்கள்; இது இலங்கையின் கடல் வள ஆராய்ச்சிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான அமைப்பு ஆகும்)






சிறார்களை வேலைக்கு அமர்த்தல்;

# எதிர்ப்புகள் நீர்த்துப்போகுமா?



ப.பிறின்சியா டிக்சி
p.p.dixci@gmail.com

நாளைகள் என்பன இன்றைய சிறார்களுக்கானவை என்பதை சிந்திக்க மறந்துள்ளனர் இன்றைய மனிதர்கள்.

தம் கண்களுக்கு எதிரேயே சிறார்களுக்கான உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில், அவற்றை எதிர்த்துக் குரல் கொடுப்பவர்கள் மிகவும் அரிதே.

எனினும், தற்காலத்தில் ஆர்ப்பாட்டங்கள், கவனயீர்ப்புப் போராட்டங்கள், விழிப்புணர்கள் எனச் சிலர் வீதிக்கு இறங்கி, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு குரல்கொடுத்து வருகின்றார்கள்.

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப் பெண்ணாக கடமையாற்றிய போது, தீக்காயங்களுக்கு உள்ளாகி மரணமடைந்த டயகமவைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியே, இவை எல்லாவற்றுக்கும் வித்திட்டுச் சென்றுள்ளார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக இன்று முன்வைக்கப்படும் கண்டனங்கள், நீர்த்துப்போகாமல், ஓர் உடும்புப் பிடியாய் தொடர வேண்டும் என்பதே, சிறார்கள் மீது அக்கறையுள்ள சமூகத்தின் தற்போதைய எதிர்பார்ப்பாக உள்ளது. காரணம், அண்மையில் கல்கிஸைப் பகுதியில் பாலியல் செயற்பாடுகளுக்காக விற்கப்பட்ட 15 வயது சிறுமியின் விவகாரம், டயகம சிறுமியின் மரணத்துடன் நீர்த்துப்போய்விட்டது.

அவ்வாறாறே, தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கப் போராட்டங்கள், தாதியர் போராட்டங்களுடன், சிறுவர் தொழிலாளர்களுக்காக எழுப்பப்படும் குரல்கள் மிகையாக ஒலிக்கவில்லை என்பதே யதார்த்தமாகிறது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சிறுவர் உரிமைகள் சாசனத்தில், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பான விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதாவது, சிறுவர்கள் பொருளாதார ரீதியில் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுவதில் இருந்தும் ஆபத்து விளையக்கூடிய தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதில் இருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என அச்சாசனம் எடுத்துரைக்கின்றது.

ஆளுமை விருத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த பருவமாக சிறு பராயம் காணப்படுவதால், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதில் இருந்து அவர்களைப் பாதுகாப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இங்குள்ள சட்டத்துக்கமைய, 14 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை எச்சந்தர்ப்பத்திலும் தொழிலுக்கு அமர்த்த இயலாது. அவ்வாறு அவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவோருக்கு எதிராக 1 வருடத்துக்கும் குறையாத சிறைத் தண்டனை வழங்க முடியும்.

ஆனால், 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களை சில சந்தர்ப்பங்களில் வேலைக்கமர்த்த முடியும். எனினும், அச்சிறார்களின் வாழ்க்கை, சுகாதாரம், கல்வி, ஒழுக்கம் போன்றவற்றுக்கும் உடல், உளப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் தொழில்களில் ஈடுபடுத்த முடியாது.

அதாவது, கிருமிநாசினி, இராசாயனத்திரவியம், பட்டாசு கைத்தொழில், இரும்பைக் காய்ச்சுதல், சுரங்க அகழ்வு, கல் உடைத்தல், விறகு வெட்டுதல், கழிவுகளை ஏற்றிச்செல்லுதல், தீப்பந்துகள் சுழற்றுதல், கரணமடித்தல், மரம் ஏறுதல், வெட்டுதல் போன்றவற்றில் சிறுவர்களை ஈடுபடுத்தல் ஆகாது.

எனவே, இவர்கள் பெரும்பாலும் வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஒரு சதவீதமான சிறுவர்கள், வீட்டு வேலைகளுக்காக அமர்த்தப்பட்டுள்ளனர் என தொழில் திணைக்களம் அண்மையில் தகவல் வெளியிட்டுள்ளது. அதாவது, 18 வயதுக்கு குறைந்த சுமார் 45,000 சிறுவர்கள் வீட்டு வேலைகளுக்காக தற்காலத்தில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஆகக் கூடுதலானவர்கள் கொழும்பு, கம்பஹா ஆகிய பிரதேசங்களிலேயே பணியாற்றுகின்றனர்.

“தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இலங்கையில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள எண்ணிக்கை தொடர்பில் ஓரளவுக்கு திருப்தியடைய முடியும். எனினும், நாடு என்றவகையில் அதுவும் இருக்கக் கூடாது”என தொழில் ஆணையாளர் நாயகம், பிரபாத் சந்திரகீர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

வேலைக்கு அமர்த்தப்படும் சிறார்கள் ஆளுமை விடுத்தி குன்றுதல், பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாவதால், நாளடைவில் நாட்டின் மீதும் சமூகத்தின் மீதும் வெறுப்புடையவர்களாக மாற்றமடைகின்றனர். இதனால் நாட்டின் எதிர்காலமும் கேள்விக்குறியாகின்றது.

சிறுவர்களை பணிக்கு அமர்த்துதல், துன்புறுத்தலுக்கு ஆளாக்குதல், துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துதல் உள்ளிட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான தகவல்களை 0112 433 333 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்விடயத்தில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 என்ற சிறுவர்களுக்கான அவசர உதவிச் சேவை இலக்கம் உள்ளமையையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

ஹோட்டல்களில் சமைப்பதற்கு, டைல்ஸ்களை வெட்டுதல் போன்ற ஆபத்தானப் பொருள்களைக் கையாள்வதற்கு, 16 - 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களைப் பயன்படுத்துவதற்கு விரைவில் தடை விதிக்கப்பட உள்ளதாக தொழில் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் புதிய ஒழுங்குவிதிகளை உருவாக்க, தொழில் திணைக்களம் தயாராகி வருவதோடு, சிறுவர்களை எந்தெந்தத் தொழில்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்பது தொடர்பான பட்டியல் ஒன்றையும் வெளியிட உள்ளதாக அறிய முடிகிறது.

மேலும், சிறுவர்களை பணியாளர்களாக வேலைக்கமர்த்துவதைத் தடுக்க சில அவசர சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு வேலை வழங்குவதைத் தடுப்பதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும், சிறுவர்களுக்காக தனி நீதிமன்றங்களை நிறுவுவதற்கும், துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்ட சிறுவர்களின் சாட்சியங்களை வீடியோ தொழில்நுட்பத்தின் மூலம் பெறுவதற்கும் புதிய சட்டங்களைக் கொண்டுவருவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் நீதி அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, ஹிஷலினி-189 எனும் வீட்டுப் பணியாளர் அவசரச் சேவை இலக்கத்தை அறிமுகப்படுத்தலுக்கான பரிந்துரையை, பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன், தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் அண்மையில் கையளித்துள்ளார்.

உண்மையில் பெரும்பாலும் பொருளாதார நெருக்கடி காரணமாகவே சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். எனவே, பொருளாதாரத்தை ஈடுசெய்யும் வழிவகையை அச்சிறார்களின் குடும்பங்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம், சிறார்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதை நாட்டில் இருந்து இல்லாதொழிக்கலாம்.

அத்தோடு, சிறார்களின் கல்விக்காகவும் அவர்களின் உரிமைகளுக்காகவும் தொடர்ந்தும் சமூகத்தில் ஒன்றித்துக் குரல்கொடுப்போம்.

# பாலியல் குற்றங்கள்



டொக்டர் சாந்தி சேகராஜசிங்கம் | அஸ்திக உபுல் தேவேந்திர | சீவலி அமிதிரிகள

சட்ட ஒளி என்பது சட்டம் தொடர்பான சந்தேகங்களை தீர்த்து வைக்கும் மும்மொழி சட்டக் கலந்துரையாடலாகும். லத்தீன் மொழியில் “*ignorantia legis neminem excusat*” என்ற தொடர் விளக்கி நிற்பது, சட்டத்தினை புறக்கணிப்பது சட்டத்திலிருந்து மன்னிப்பு பெறுவதற்கான வழி அல்ல என்பதனையே ஆகும். அந்த வகையில் இலங்கை சட்ட மாணவர் சங்கத்தின் ப்ரோ போனோ குழுவானது நம் நாட்டு சட்டங்களினை எளிமையாக்குவதன் மூலம் பொது மக்களுக்கு அறிவூட்ட முற்படுகின்றது. அதன் நான்காவது கலந்துரையாடல் ‘பாலியல் குற்றங்கள்’ குறித்து கவனம் செலுத்தியுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கான குழுவானது பின்வரும் சட்டத்தரணிகளை உள்ளடக்கியிருக்கின்றது: சீவலி அமிதிரிகள pc குற்றவியல் மற்றும் சிவில் சட்ட பயிற்சியில் மிகவும் ஆர்வமுடையவர், கொழும்பு சட்டக் கல்லூரி மற்றும் றோயல் நிறுவனத்தின் மூத்த விரிவுரையாளரும் ஆவார். அஸ்திக உபுல் தேவேந்திர, சட்டக் கல்லூரி அனுமதி பரீட்சைக்கான மூத்த விரிவுரையாளராகவும் சி எப் பி எஸ் சட்டப் பள்ளியின் மூத்த விரிவுரையாளராகவும் கடமையாற்றிய மூத்த சட்டத்தரணி ஆவார். பேராசிரியர் டொக்டர் சாந்தி சேகராஜசிங்கம் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் மூத்த விரிவுரையாளராவர்.

**கற்பழிப்பு / வன்புணர்ச்சி குற்றத்தில் சம்மதம் என்று பொருள் கொள்ளப்படுவது யாது? நீதிமன்றத்தில் எவ்வகையான சம்மதம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது?**

தண்டனைச் சட்டக் கோவையில் உள்ள பாலியல் குற்றங்களாவன, கற்பழிப்பு (s.363), முறையில்லாப்புணர்ச்சி (s.364A), இயற்கைக்கு மாறான புணர்ச்சி (s.365), ஆட்களுக்கு இடையில் மிக இழிவான செயல்கள் (s.365A), பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் (365B) மற்றும் பாலியல் பலாத்காரம் அல்லது தொந்தரவு (s.344) என்பன ஆகும். அந்த வகையில் கற்பழிப்புக் குற்றத்தை வரையறுக்கும் பிரிவிற்கு அமைய, கற்பழிப்பு என்பது, ஓர் ஆண் அந்தப் பெண்ணின் சம்மதமின்றி அந்தப் பெண்ணுடன் உடலுறவு கொள்ளுவதை எடுத்துரைக்கின்றது. கற்பழிப்பு / வன்புணர்ச்சி குற்றத்தில் சம்மதம் வழங்கப்படாமை ஒரு முக்கிய அம்சமாகும். எனினும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சம்மதம் பெறப்பட்ட போதிலும் அது சம்மதமாக தகுதி பெறாது, உதாரணமாக சட்ட முறையாக அல்லது சட்ட முறையற்ற விதத்தில் ஒருவரை தடுத்து வைத்திருக்கும் போது கட்டாயப்படுத்தி பெறப்படும் சம்மதம் சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்மதமாகக் கருதப்பட மாட்டாது.

நீங்கள் ஒருவரை மிரட்டுவதன் மூலம், அவரை அச்சுறுத்தி, மரண பயத்தினை காட்டுவதோடு அல்லது ஊறு விளைவிக்கப்படும் என்ற பயத்தின் மூலம் பெறப்படும் சம்மதமானது பயத்தினால் அல்லது மிரட்டி பெறப்பட்ட சம்மதமாகக் கருதப்படும். அவ்வாறான சம்மதங்கள் உடலுறவினை மேற்கொள்ளுவதற்கு ஏற்ற சம்மதமாகக் கருதப்பட மாட்டாது. அதே போல வேறொருவரால் குடிபோதைக்கு அல்லது போதை வஸ்தால் தூண்டப்பட்டு அல்லது பெண் சித்த சுவாதீனமற்று காணப்படும் போது பெறப்படும் சம்மதம் சட்டதின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையான சம்மதமாகக் கருதப்பட மாட்டாது. சம்மதம் தெரிவிக்க முடியாத வயது குறைந்தவர்கள் உடலுறவுகளில் ஈடுபட்டதற்கான பல சம்பவங்கள் உள்ளன. இலங்கை சட்டத்தின் கீழ் பாலியல் செயற்பாடுகளுக்கு/ உடலுறவுக்கு சம்மதம் தெரிவிக்கும் வயதெல்லை 16ஆகக் காணப்படுகின்றது. நீங்கள் 16 வயதிற்குட்பட்டவராக இருந்தால், நீங்கள் சம்மதித்திருந்தாலும், அது செல்லுபடியான சம்மதமாகக் கருதப்பட மாட்டாது.

சம்மதமானது சுதந்திரமான, நேர்மையான, புரிந்துணர்வுடன் கொடுக்கப்பட்டதாகவும், அவள் எவ்விதமான செயலில் ஈடுபடுகின்றாள் என்பதை சம்மதம் வழங்கும் முதல் சிந்தித்து பார்த்துக் கொடுக்கப்பட்டதாகவும், இருக்க வேண்டும்.

**சம்மதம் மற்றும் அனுமதித்தல் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை விளக்க முடியுமா?**

இன்னோகா கலகே எதிர் கமல் அத்தராட்சி என்ற வழக்கில் நீதிபதி அசோகா டி சில்வா, ஹரினேரியன் எதிர் ஸ்டேட் வழக்கிலிருந்து மேற்கோள் காட்டி “தவிர்க்க முடியாத நிர்பந்தத்தால் தெரிவிக்கப்படும் சம்மதம், எதிர்ப்பில்லாமல் அல்லது ஒருவரால் அச்சுறுத்தபட்டு அல்லது மிரட்டி சம்மதம் வாங்கும் பட்சத்தில் அது சம்மதமாக கருதப்பட மாட்டாது. ஒரு பெண் தன்னுடைய பாதுகாப்பு கருதி பாலியல் பலாத்காரத்திற்கு தானாக முன்வந்து சம்மதம் அளிப்பது மட்டும் போதுமானது அல்ல, அங்கு ஒரு பெண் அதனை எதிர்ப்பு தெரிவிக்காமைக்கும் சம்மதம் அளித்தமைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. அதேவேளை ஒரு பெண் பயத்தின் காரணமாகவோ அல்லது மிரட்டப்படும் சந்தர்ப்பத்திலோ தன்னுடைய உடலை சமர்ப்பிப்பது ஒப்புதல் இல்லை”. சம்மதம் என்பது உட்கிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்குவதையே குறிக்கும். இருப்பினும் ஒப்புதலுக்கும் சம்மதத்திற்கும் இடையில் மிகத் தெளிவான வேறுபாடு உள்ளது.

**கற்பழிப்புக்கான தண்டனை என்ன?**

குறைந்தபட்ச தண்டனை 7 முதல் 20 ஆண்டுகள் வரை ஆகும். அரசாங்க அதிகாரி தனது அதிகாரத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி ஒரு கர்ப்பிணிப் பெண், 18 வயதிற்குட்பட்ட பெண், மனநிலை சரியில்லாத அல்லது கும்பல் கற்பழிப்பு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கான தண்டனை 10 வருடத்திற்கு அதிகமாகவும் 20 வருடத்திற்குக் குறைவாகவும் காணப்படும். முறையில்லாப்புணர்ச்சியில் நடைபெறும் கற்பழிப்பிற்கு தண்டனை 15 ஆண்டுகளுக்கு மேல் மற்றும் 20 வருடங்களுக்குக் குறைவாக இருக்கும்.

**இலங்கை சட்டத்தின்படி, ஒரு ஆண் மீது பாலியல் பலாத்காரம் செய்ததற்கு ஒரு பெண் பொறுப்பாக வாய்ப்பு உள்ளதா?**

தண்டனை சட்டக் கோவையில் 363 பிரிவிற்கு அமைய தெளிவாக புலப்படுவது யாதெனில், இந்தக் குற்றமானது ஓர் ஆணால் ஒரு பெண் மீது செய்யப்படுவதே ஆகும். இந்த வரையறைகளுக்கமைய ஒரு பெண்ணால் ஓர் ஆண் கற்பழிக்கப்படுவதை எதிர்பார்க்க முடியாது என்று நான் கருதுகின்றேன்.

**இலங்கையில் திருமணத்திற்குள் கற்பழிப்பு என்பது குற்றமாக உள்ளதா?**

சமகால குற்றவியல் சட்டத்தின்படி, பிரிவு 363A ற்கு அமைய நீதிமன்றக் கட்டளையின் கீழ் இருவரும் பிரிந்து தனித்தனியாக வாழுகின்ற போது நடைபெறும் உடலுறவு மாத்திரமே திருமணத்திற்குள் கற்பழிப்பு எனக் கொள்ளப்படும்.

**‘நிறுவனக் கற்பழிப்பு’ என்றால் என்ன என்பதை விளக்க முடியுமா?**

ஒரு நபர் ஒரு நிறுவனத்தில் அதிகார நிலையில் இருக்கிறார். மற்றும் பாதிக்கப்பட்டவர் அந்த நிறுவனத்தில் உள்ளவர் எனும் போது, அத்தகைய ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்தால், அது ஒரு நிறுவனக் கற்பழிப்பு என்று கருதப்படும். நீர் - இங்கு அதிகாரத்தில் உள்ளவர் ஒப்புதல் பெறும்போது கூட, அது வலிதான சம்மதமாக இருக்காது.

**ஒரு கும்பல் கற்பழிப்பு நடந்தால், அதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சட்டம் எவ்வாறு தண்டனை அளிக்கிறது?**

கும்பல் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடும் அனைத்து பங்கேற்பாளர்களும், கும்பல் கற்பழிப்பு செயலில் பங்கேற்ற ஆதாரங்களின்படி, அவர்கள் மீது குற்றம் சாட்டப்படும். குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் அல்லது சிலர் வெறுமனே ஆஜராகி, தீவிரமாக பங்கேற்காத பட்சத்தில் அத்தகைய நபர் கும்பல் பாலியல் பலாத்காரத்தில் குற்றவாளியாகக் கருதப்பட மாட்டார்.

**முறையில்லாப் புணர்ச்சி என்றால் என்ன? அதனுடன் இணைக்கப்பட்டுள்ள தண்டனை என்ன?**

தண்டனை சட்டத்தின் பிரிவு 364A க்கு ஏற்ப முறையில்லாப் புணர்ச்சி எனப்படுவது சந்ததியினர் அல்லது வளர்ப்பு பெற்றோர், பேரப் பிள்ளைகள், பாதி இரத்த உறவு சகோதர அல்லது சகோதரியின் இருவருள் ஒருவரின் சந்ததிகளுக்கு இடையில் உடலுறவு கொள்ளலே ஆகும். இவ்வாறான உறவுகளுக்கிடையே உடலுறவு கொள்பவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதோடு அவர்கள் சட்டத்தின் கீழ் 7 ஆண்டுகளுக்கு குறையாத மற்றும் 20 வருடங்களுக்கு அதிகமாகாத கடுழிய சிறை தண்டனையாலும் அத்துடன் குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படுவர்.

**பாதிக்கப்பட்டவர் சட்டத்தால் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறார்?**

பெண்கள், குழந்தைகளுக்கான சிறப்புப் பிரிவுகளைக் கொண்ட பொலிஸ் நிலையங்கள் உள்ளன. பாதிக்கப்பட்ட பெண், ஒரு பெண் அதிகாரியுடன் பேச முடிந்ததற்கு நிம்மதியை உணருவார். விசாரணையின் போது கேமராவில் வீடியோ சாட்சியம் சம்பந்தப்பட்டவர்களை மட்டுமே உள்ளடக்கி இருக்கும். ஆண்களுக்கு எதிராக தவறான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் பெண்கள் குறித்தும் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

சீனத் சாகீர் ப்ரோ போனோ செயலாளர்
மொழிபெயர்த்தது – எம். திவாகரணி
‘இலங்கையின் சட்ட மாணவர் சங்கம்’ என்ற யூடியூப் சேனலில், முழுமையான கலந்துரையாடல்’ மூன்று மொழிகளிலும் கிடைக்கிறது.

# மனநிம்மதி வேண்டும்; அதற்காக முண்டியடிப்பதே பேராபத்து

ஏதோவொரு பிரச்சினைக்குள் மண்டையைப் போட்டு குழப்பி குடைந்துகொண்டிருப்பவர்கள், மதவழிபாட்டு ஸ்தலங்களுக்குச் சென்றுதிரும்பியதன் பின்னர், தன் தலையிலிருந்த பெரிய பாரத்தை கீழே இறக்கிவைத்துவிட்டு வந்துவிட்டதாகவே உணர்வர்.

எந்த மதமாக இருந்தாலும் அந்தந்த மதங்களைச் சேர்ந்த வழிபாட்டிடங்களுக்கு சென்றுதிரும்பும் ஒவ்வொரினதும் முகங்களிலும் இனம்புரியாத செழிப்பை காணலாம். அதனால்தான் என்னவோ, முயற்சி செய்யும் வரையிலும் முயல்வோம்; அதன்பின்னர் தெய்வத்திடம் ஒப்படைத்து விடுவோம் என அரசாங்கம் கூறியிருக்கிறது.

சகலரையும் தெய்வம்தான் காப்பாற்ற வேண்டுமாயின் ஆட்சியொன்று தேவையில்லை; அரசாங்கமும் தேவையில்லை என எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை முன்வைக்கின்றன. ஆனால், மதவழிபாட்டிடங்களுக்குச் சென்று மனநிம்மதியை பெறுவதற்குக்கூட, கொரோனா இடையூறாக இருக்கிறது.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றி, மதவழிபாட்டிடங்களை திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தாலும் பெரும் திருவிழாக்கள், சிறப்பு பூஜைகள் எனக்கூறிக்கொண்டு பெருந்திரளாகச் செல்லும் மக்கள் கொரோனா கொத்தணிக்கு வழிசமைத்து கொடுத்துவிடுகின்றனர்.

கண்டி, எசல பெரஹரா பார்வையாளர்கள் இன்றி நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று (13)கொடியேற்றப்பட்டது. கோவிலுக்குள் செல்வதற்கு பக்தர்களுக்கு இடமளிக்கவில்லையெனக் கூறி, நடுவீதிகளில் அமர்ந்துகொண்டு பக்தர்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்தனர்.

முடக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் நுழைவதற்கு யாருக்குமே அனுமதி கிடைக்காது; அங்கிருந்து வெளியேறவும் முடியாது. அதனைத்தவிர, எங்கு செல்லவேண்டும். எங்குச் செல்லக்கூடாதென யாருக்கும் யாரும் வரையறை விதிக்கவில்லை. நல்லூர்த் திருவிழா நிறைவடையும் வரையிலும் ஒவ்வொருநாளும் சிறப்புப் பூஜைகள் இடம்பெறும். அதற்கெல்லாம் முண்டியடித்துக்கொண்டு செல்லாமல், சமூக இடைவெளியை பேணி, வழிபாடுகளில் கலந்துகொண்டால், சகலக்கும் ஜெயம்.

மதவழிபாட்டிடங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவது ஒருமுறையாகும். மற்றுமொரு முறையான, வீடுகளிலிருந்தும் வழிபடலாம். நாடு முழுமையாக முடக்கப்பட்டிருந்த காலத்தில், திருவிழாக்கள் நடத்துவதற்கு இடமளிக்கப்படவில்லை என்பதை நினைவில் கொண்டு, கடுங்கவனமாக இருக்கவேண்டும்.

நமது நாட்டை பொறுத்தவரையில், பிளவ வருட புத்தாண்டு கொத்தணியே இன்னும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. இதற்கிடையில் மதவழிபாட்டிடங்களில் கொத்தணி உருவாகிவிடுமோ என்றொரு பேரச்சம், சுகாதார தரப்பினரிடம் சூழ்கொண்டுவிட்டது.

தற்போதைய நிலைமையில் சுயக்கட்டுப்பாடுகளும், சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றுதலும் அதிமுக்கியமானதாக கருதப்படுகின்றது. இல்லையேல், இலங்கையில் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் 18ஆயிரம் கொரோனா மரணங்கள் இடம்பெறக்கூடுமென்ற எதிர்வுகூறல் யதார்த்தமாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

மன நிம்மதி வேண்டும். அதற்காக மதவழிபாட்டிடங்களுக்குச் செல்லத்தான் வேண்டும். அங்கு முண்டியடிப்பது பேராபத்துக்கு வித்திட்டுவிடும் என்பதை ஞாபகமூட்டுகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகளை தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# நல்லிணக்கம் = பாரபட்சம்

லக்ஸ்மன்

வடக்கு, கிழக்கை ஆக்கிரமித்து தமிழ் மக்களை நசுக்க நினைக்கும் இந்த பேரினவாத அரசுக்கு, தமிழ் மக்கள் பாடம்புகட்டவேண்டும் என்றே தமிழர் தரப்பு ஒவ்வொரு தடவையிலும் தேர்தலில் குதிக்கிறது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானதற்கு ஒப்பான அந்தப் பேச்சுக்காக கிடைக்கின்ற வாக்கும் சரி, ஆசனங்களும் சரி குறைந்து கொண்டே வருகிறது. அதே நேரத்தில் எதிர்ப்புணர்வுகளால் உசுப்பேற்றுபவர்களுக்கு ஆசனங்கள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. அதற்கு நடந்து முடிந்த தேர்தலும் நல்ல சாட்சி.

பாரபட்சம் காரணமாகவே நமது நாட்டில் இனப்பிரச்சினை கோரங்கொண்டது எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும் அவரவர் நலன்களை முன்நிறுத்துவதால்தான் தொடர்ந்தும் பேரினவாத அரசின் அடக்குமுறைகளும் உரிமை மறுப்புகளும் தொடர்ந்தவண்ணமிருக்கின்றன.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதை அடுத்து கிழக்கிற்கெனத் தனியாக உருவாக்கப்பட்டுள்ள தொல்பொருள் ஆய்வுக்குப் பொறுப்பான ஜனாதிபதி ஆணைக்குழு, சிறுபாண்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர்கூட இல்லாமல் பெரும்பான்மை இனத்தினை பிரதிபலிக்கின்ற பௌத்த மதம் சார்ந்த இராணுவ மயத்தனத்தோடுதான் செயற்படத் தொடங்கியது. அதற்கெதிரான குரலெழுப்புதல்களை அரச சார்பானவர்கள் யாரும் செய்யாமை அதற்கு இன்னமும் உரம் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

வெறும் எதிர்ப்புகள் தமிழ் தரப்பால் மாத்திரமே கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிழக்கு வாழ் தமிழ் மக்களின் புராதன பாரம்பரிய கலாசார மற்றும் மத அடையாளங்களை இல்லாமல் செய்து பெரும்பாண்மை இன மக்களது பௌத்த மத அடையாளங்களை நிறுவுதற்கான ஓர் ஏற்பாடாகவே இதனை அனைவரும் அறிவர்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட நல்லிணக்க நீதிப் பொறிமுறையில் இருந்து இலங்கை தன்னிச்சையாக விலகியமை மற்றும் தமிழ் இளைஞர்களை (மிருசுவில்) படுகொலை செய்ததற்காக நீதி மன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரியை ஜனாதிபதி பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்தமை போன்ற விடயங்களானது இலங்கையில் தமிழ் மக்களுக்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்படுவதனைக் காட்டுவதாக உள்ளது.

அந்த வகையில்தான் இலங்கை அரசானது பெரும்பான்மை இன மக்களுக்கும் பௌத்த மதத்திற்கும் முன்னுரிமை அளித்து ஏனைய இன மக்களினது மதங்களையும் அடக்கி ஒடுக்குவதற்கான செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது தமிழ் மக்களுக்காக தொடர்ந்தும் தமிழ்த்தரப்பு கொடுத்துவரும் பாரிய எதிர்ப்பு காரணமாக இத்திட்டங்களை பூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் உள்ளன.

இத்தகைய சூழ்ச்சிகளில் அரசு இன்னமும் வெற்றிபெறவில்லையாயினும் தமிழ் அதிகாரிகள் நாட்டின் பிரதான அமைச்சுகளில் உள்நுழைவுகளையும் தடுக்கும் கைங்கரியம் ஒன்று அண்மையில் அரங்கேறியது. இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழுவின் மே மாத தீர்மானத்திற்கமைய பதவி உயர்த்தப்பட்ட ஐந்து தமிழ் பேசும் அதிகாரிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தலைநகருக்குச் சென்று கடமை பொறுப்பேற்க முடியாது என்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். தொழில், சமுர்த்தி, விமானசேவைகள், நகர அபிவிருத்தி, நீர்ப்பாசனம் ஆகிய அமைச்சுகள் அடங்கும். அதில் நீர்ப்பாசன அமைச்சுக்கு நியமனம் பெற்ற ஒரு முஸ்லிம் அதிகாரி மாத்திரம் வேறு ஒரு அமைச்சுக்கு இணைவதற்கு சில நாட்களில் அனுமதிக்கப்பட்டார். ஏனையவர்கள் பல முயற்சிகளின் பின்னர் பொது நிருவாக அமைச்சில் கையொப்பமிடுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வெற்றிடங்களாக அறிவிக்கப்பட்ட அமைச்சுகள் நாட்டின் முக்கிய அமைச்சுகள் அவை சிங்கள மொழி மூலம் கடமையாற்ற வேண்டியவை என்ற ஒரு காரணத்திற்காகவே இந்த அதிகாரிகள் பணிப்பாளர் நாயகங்களாக கடமையை ஏற்க முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. சேவை நிலைய வெற்றிடங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்ட பின், பொதுச் சேவை ஆணைக்குழு நியமித்ததன் பின்னர் பொது நிருவாக அமைச்சு அதற்குரிய பொறுப்பைச் சரியாக நிறைவேற்றத் தவறியிருக்கிறது. இது வெறும் தட்டிக்கழிப்பல்ல என்பது மாத்திரம் வெளிப்படையாகத் தெரிந்தாலும் அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய பொது நிருவாக அமைச்சின் செயலாளர் கவனமற்றிருக்கிறார். இது ஏதோ அவரின் கடமை தவறல் என்று விட்டுவிட முடியாத ஒன்றாகும். இதில் நாட்டின் பெரும்பான்மை அரசியலே இருக்கிறது என்பது மட்டுமே பெரும் உண்மை.

குறிப்பிட்ட அமைச்சுகள் நாட்டின் முக்கிய அமைச்சுகள், சிங்கள மொழியை பிரதானமாகக் கொண்டு செயற்பட வேண்டியவை. அவற்றுக்கு தமிழ் பேசுபவர்களை நியமனம் செய்வது முடியாது என்றால், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களை பெருவாரியாகக் கொண்டது. அங்கு சிங்கள மொழியே பேசும் தமிழே சிறிதும் தெரியாத அதிகாரிகளை பிரதம செயலாளர்களாகக் கொண்டு செயற்பட முடியுமா என்பதே கேள்வி. முடக் குதிரைக்கு நொண்டிச் சாட்டு சொல்லும் அரசாங்கம் எவ்வாறு நாட்டில் நல்லிணக்கத்தினைப் பற்றிப் பேச முடிகின்றது என்பதுதான் இங்கு முக்கிய கேள்வி.

ஆங்கிலேயர்களது ஆட்சியிலிருந்து 1948 இல் நாடு சுதந்திரம் பெற்றபோது ஒற்றையாட்சி அரசியலமைப்பு பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டில் இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இக் காலப்பகுதியிலேயே அரச ஆதரவுடன் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில், பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றும் திட்டங்கள் தீவிரமடைந்தன.

அப்போதிலிருந்து தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடமாகிய வடக்கு-கிழக்கின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முனைப்புடன் திட்டமிட்ட அரச ஆதரவுச் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றன.

1956, 1958, 1961, 1977, 1981 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளிலும், அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாகவும் தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட வன்முறை, இனக்கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டது. அரசு எவ்வித பாதுகாப்பையும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வழங்கவில்லை. மாறாக இன்னல்களையே கொடுத்த வண்ணமிருந்தது. 2009ல் ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் கூட ஆக்கிரமிப்புகள் தொடர்ந்தவண்ணமிருக்கின்றன.

தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, பெருமளவு தன்னாட்சி அதிகாரத்தினை வழங்கும் ஒரு மாற்று அரசியல் ஏற்பாட்டினை பெற காலங்காலமாக பல முறை முயற்சிகள் நடைபெற்றன. அடுத்தடுத்து ஆட்சி செய்த அரசாங்கங்களுடன் பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் தேசிய இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாதேயிக்கின்றது.


நீதி, சமத்துவம், சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் ஓர் அரசியலமைப்புக் கட்டமைப்பின்றி பல்லின சமூகமொன்றில் ஜனநாயகம் செயற்பட முடியாது என்பது தமிழர் தரப்பினுடைய நிலைப்பாடாக இருந்தாலும் நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை நாட்டில் காணவில்லை. தொடர்ந்தும் நடைபெறும் பாகுபாடுகள், பாரபட்சங்கள் அதற்கான சிறு சமிக்ஞைகள் கூட இல்லை என்பதனை நிரூபித்தவண்ணமே இருக்கின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வானது கடந்த காலத்தை கையாளுதல் என்ற விடயத்தில் போரினால் வடக்கு மற்றும் கிழக்கில் ஏற்பட்ட சமூக-பொருளாதார மாற்றமானது இப்பிரதேசங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மீளகட்டியெழுப்புதல் என்பது தாக்கத்தை செலுத்துகிறது. வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் இன்னும் தீர்க்கப்படவில்லை. காணாமல்போனவர்களின் அலுவலகம் மற்றும் இழப்பீடு வழங்கும் அலுவலகம் ஆகியவற்றின் இயக்கம் திருப்திகரமானதாக இல்லை. நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இன்னமும் நிறைவேறவில்லை.

இனக்கலவரத்தின் வரலாறாக தமிழ் மக்கள் அனுபவித்த மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்கான நீதி விட்டுக்கொடுப்பற்றதாகவும் அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் இன்றியமையாதகவும் இருக்கிறது. இழப்பீடுகள்,

போரில் குடும்ப உறுப்பினர்களையும் அன்புக்குரியவர்களையும் இழந்த அனைவருக்கும் அவர்களை நினைவுகூர உரிமை உண்டு. யுத்தம் முடிவடைந்ததிலிருந்து, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மக்கள் நினைவேந்தல் நடவடிக்கைகளில் சுதந்திரமாக ஈடுபடுவதை அரசு தடுத்துள்ளது, இதன் மூலம் அவர்கள் பல ஆண்டுகளாக அனுபவித்து வரும் வேதனை உணர்வும் அதிர்ச்சியும் அதிகரித்துள்ளது. தமிழ் மக்களின் நினைவுகூரும் உரிமை மதிக்கப்பட வேண்டும். இதிலும் பாரபட்சமே காட்டப்படுகிறது.

முரண்பாடுகள் வலுப்பதற்கு படியெடுத்துக்கொடுக்கின்ற அரசாங்கத்தில் பரஸ்பரம் விட்டுக்கொடுப்பென்பதற்கே இடமில்லை பாரபட்சம் ஒன்றே ஆக்கிரமிக்கிறது. இவ்வாறான பாரபட்சங்கள் காலங்காலமாக நடைபெற்று வந்திருந்தாலும் இப்போது நடைபெற்றிருப்பது ஒரு வரலாற்று உதாரணமாகக் கொள்ளப்படலாம். இவ்வாறிருப்பதையே நாம் நல்லிணக்கம் சமன் பாரபட்சம் என்கிறோம்; எதிர்காலத்திலும் தொடரும்.



## வாழ்வியல் தரிசனம்

குழப்பத்தை தங்களுக்குள் திணித்துக் கொண்டு, சமூகத்தையும் உலகத்தையும் திட்டிக்கொண்டிருப்பவர்கள் மனச்சாட்சி அற்றவர்கள்.

உடலை வளைத்து கருமமாற்றாமல் கண்டவர்களிடம் கடனைப் பெற்று காலத்தை கரைப்பவர்கள், தாங்கள் என்ன செய்கின்றோம் எனப் புரியாமல் இருக்கின்றார்கள்.

தன்னைத் தான் உணர்வதும் தன்னைதான் புடம் போடுவதும் எழுவதற்கான வழி. பலவீனமாக இருக்கும் போது அதுவே நியதி. கட்டளை எனக் கருதுவதும் அநாகரிகமானதும், விபரீதமான வீழ்ச்சிகளையும் தரும்.

மானுட வாழ்வில் எல்லாமே நடக்கும். எதுவுமே புதியது அல்ல. அடுத்த கட்ட வாழ்வு எமக்கானது எனத் தீர்மானமும் திட நம்பிக்கையும் எடுப்பவர்கள் தோல்விகளுக்கு அடிமையாவது இல்லை.

சறுக்கி விழுந்தால் அப்படியே படுக்கமுடியாது. எங்களுக்கு நாங்களே காவலர்கள். அடுத்தவர்களின் இரக்கம், உதவி எத்தனை நாள்களுக்குச் செல்லுப்படியாகும். துன்பத்திற்கு அடுத்தது இன்பம்தான்.

பருத்தியூர் பால- வயிரவநாதன்

## கடிதங்கள்

### மூடப்பட்ட எட்டு பாடசாலைகளையும் திறவுங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளைத் திறப்பதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர், கிளிநொச்சி மாவட்டத்தில் போர்ச் சூழல், உவர் பரவல் காரணமாக, மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், பாடசாலைகள் மூடப்பட்டன.


பூநகரி கல்விக் கோட்டத்தில் ஆறு பாடசாலைகளும் கரைச்சி கல்விக் கோட்டத்தில் இரண்டு பாடசாலைகளும் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. பொன்னாவெளி பாடசாலை அதே இடத்தில் இயக்குவதில் சிரமங்கள் காணப்படுகின்றன. காரணம் அக்கிராமம் முழுமையாக உவரடைந்து மக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர். குறித்த பாடசாலையை கிராஞ்சிக்கும் வேரவிலுக்கும் இடையில் இயக்கும்படி பெற்றோர்கள் கடந்த பத்து வருடங்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதேபோன்று, பல்லவராயன்கட்டு, கௌதாரிமுனை ஆகிய பாடசாலைகளையும் இயக்க வைக்க வேண்டும் என்பது பெற்றோர்களின் கோரிக்கையாகும். இதேவேளை, குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம், கிராமம் முழுமையாக உவரடைந்ததன் காரணமாக பாடசாலை மூடப்பட்டுள்ளது. இப்பாடசாலையினை ஸ்கந்தபுரம், மணியங்குளம் கிராமத்தில் இயங்க வையுங்கள் என வலய அதிகாரிகளிடம் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு, பாடசாலைகளையும் இயங்க வைப்பதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பெற்றோர்களின் கோரிக்கையாகும்.

நடராசா கிருஸ்ணகுமார்

# சிறுநீரகக் கல்



## அறிகுறிகளும் தடுக்கும் வழிகளும் குறித்து டொக்டர் ஐ. பிரபாத் விளக்குகிறார்



பைஷல் இஸ்மாயில்



பெரிய கற்களைவிட, சிறு கற்கள் அதிக வலியைக் கொடுக்கும். வலி, ஊமை வலிபோல இருக்கலாம். அல்லது, திடீரென்று உருவாகி பொறுக்க முடியாத எல்லையைத் தொடலாம். உட்காரும் விதத்தாலும், வாகனங்களில் போகும்போதும் ஏற்படும் அசைவுகளாலும் வலி ஏற்படலாம். வலி ஒரு சில மணி நேரங்களுக்குத் தொடரும்; அதன் பின் வலி நின்று விடலாம்.

சிறுநீரகத்தில் தோன்றும் கற்கள் முதலில் அதிகமாகவும் பின்பு குறைவாகவுமே வலியைத் தோன்றச் செய்யும். எங்கு கல் உருவாகி நிற்கிறதோ அந்தப் பக்கமே அடிவயிற்று வலி அதிகமாக இருக்கும். இடுப்பைச் சுற்றியும் அந்த வலி இருக்கும்.

சிறுநீர்ப் பையிலிருக்கும் கல் அடிவயிற்றில் வலியைக் கொடுக்கும். சிறுநீர் கழிக்கும்போது வலி ஏற்படும். பெரும்பாலும் இது ஆண்குறியின் நுனியில் ஏற்படும். திடீரென்று மிக அசாதாரண அடி வயிற்று வலியை அனுபவிப்பார்கள் என்று கூறுகிறார் மட்டக்களப்பு, போதனா வைத்தியசாலையில் சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணராகக் கடமையாற்றும் டொக்டர் ஐ. பிரபாத் பத்திரன MBBS, MD, MRCS. சிறுநீரகக் கல் தொடர்பான இவருடனான உரையாலை கேள்வி-பதில் வடிவத்தில் கீழே தருகின்றோம்.

**கேள்வி: சிறுநீரகக் கற்கள் உண்டாகும் சந்தர்ப்பங்கள் எவை?**

பதில்: சிறுநீரகக் கற்கள் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். நீர் அருந்தாத தன்மையால் உடலில் ஏற்படுகின்ற வறட்சியின் காரணமாக கல் உருவாகின்றது. நாம் அருந்தும் தண்ணீரைப் பொறுத்தும் கற்கள் உருவாகக் காரணமாக அமைகின்றது. அதாவது, அந்தத் தண்ணீரில் கல்சியம் கூடுதலாக இருப்பதால் கற்கள் உருவாகின்றன. வெப்பம் அதிகமான பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கு இந்தக் கற்கள் உருவாகக் காரணமாகிறது.

சிறுநீர் கழித்த பின்னர் சிறுநீர்ப் பையில் தேங்கி நிற்கின்ற சிறுநீராலும் கற்கள் உருவாகின்றன. சிறுநீர் வருகின்ற பாதையில் ஏற்படுகின்ற தடையால் கற்கள் உருவாகின்றன. சிறுநீரகத்தில் ஏற்படுகின்ற நீண்டகால கிருமித் தொற்றுக்களாலும் கற்கள் உருவாகக்கூடிய தன்மையுள்ளது. விசேடமாக பரம்பரையாக இருப்பவர்களுக்கும் வம்சாவழியாக இது வரலாம்.

மேலும் உணவு, மாமிசத்தில் புரோட்டின் அதிகமாக இருந்தாலோ, சோடியம், ஒக்ஸலேட் அதிகமாக இருந்தாலோ, நார்ச்சத்து மிகக் குறைவாக இருந்தாலோ, பொட்டாசியம் அதிகமுள்ள பழங்களை உண்ணாமல் இருந்தாலோ கற்கள் உருவாகும். ஆண்களுக்கு பொதுவாக 20 வயதிலிருந்து 70 வயது வரையிலும், பருமனாக இருப்பவர்களுக்கும் மிகவும் எளிதாகக் கற்கள் உருவாகலாம். நீண்ட நாள்களுக்கு நோய் வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தாலும் கற்கள் உருவாகலாம்.

மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, ஒட்டக இறைச்சி, மான் இறைச்சி, மரை இறைச்சி, பன்றி இறைச்சி போன்ற பல இறைச்சி வகைகளை மிக அதிகமாக உண்ணுவதன் மூலம் யூரிக் அசிட் என்ற கற்கள் உருவாகின்றன. மேலும், தக்காளிப்பழம் அதிகமாக சாப்பிடுகின்றவர்களுக்கு (ஒக்ஸலேட்) என்ற கற்கள் உருவாகக் காரணமாக அமைந்து விடுகின்றது.

**கேள்வி: சிறுநீரகக் கற்கள் எங்கே உருவாகின்றன?**

பதில்: கற்களின் உருவம், அளவு, வளரும் இடம் போன்றவற்றைப் பொறுத்தே அதன் அறிகுறிகளும், வலிகளும் காணப்படும். அதாவது, சிறுநீரகத்தில் உண்டாகும் கற்கள், சிறுநீர்க் குழாயில் உண்டாகும் கற்கள், சிறுநீர்ப் பையில் உண்டாகும் கற்கள், சிறுநீர்ப் பாதையில் உண்டாகும் கற்கள் என நான்கு இடங்களில் இந்தக் கற்கள் உருவாகின்றன.

மிகக் கூடுதலாக சிறுநீரகத்தில்தான் கற்கள் உருவாகின்றன. அவ்வாறு உருவாகும் கற்கள் சிறுநீர்க் குழாயில், சிறுநீர்ப் பையில், சிறுநீர்ப் பாதையில் வருவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

சிறுநீரகத்தில் உருவாகும் கற்கள் பெரியளவிலான வலியை ஏற்படுத்துவதில்லை. இந்த வலி கூர்மையான வலி இல்லாமல், ஒரு மழுக்கமான வலியாகக் காணப்படும். இந்த வலி மிக நீண்டகாலமாக இருக்கும். இதை தாங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றபடியால் அதனை அவர்கள் கணக்கில் எடுக்காமல் உதாசீனப்படுத்தியவர்களாக தங்களின் அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்வார்கள்.

இவ்வாறு உதாசீனப்படுத்திச் செல்லச் செல்ல சிறுநீரகத்தில் இருக்கின்ற கல் வளர்ந்துகொண்டே செல்லும். இதனால் கிருமித் தொற்று ஏற்படத் தொடங்கி, அது சிறுநீரகத்தை பாதிப்படையச் செய்துவிடும்.

இது இரண்டு பக்கமும் உள்ள சிறுநீரகத்தை கல் அடைக்குமாக இருந்தால் இரு சிறுநீரகத்தையும் பாதிப்படையச் செய்துவிடுவது. அது மாத்திரமல்லாமல் நீண்டகால சிறுநீரகப் பாதிப்பையும் ஏற்படுத்திவிடும். (சரியான சிகிச்சையை பெற்றுக்கொள்ளாவிட்டால்) சிறுநீரகக் குழாயில் உண்டாகும் கற்கள் தங்களால் தாங்க முடியாதளவு வலியை ஏற்படுத்திவிடும். இதைத் தாங்க முடியாதவர்கள்தான் வைத்தியசாலைக்கு உடனடியாக வருகை தருகின்றார்கள்.

இந்த வலியை யாரும் தாங்க மாட்டார்கள். இந்த வயிற்று வலி ஆணுறுப்பை அல்லது பெண்ணுறுப்பை நோக்கி பரவி வருவதுபோல் காணப்படும். அது மாத்திரமல்லாமல் வாந்தி வருவதுபோல் இருக்கும், சலத்துடன் இரத்தம் வெளியேறும், காய்ச்சல் வரும், காய்ச்சல் வருகின்ற சந்தர்ப்பமாக இருக்குமாக இருந்தால், இது சிறுநீரகத்தை பெரிதும் பாதிப்படையச் செய்துவிடும்.

சிறுநீர்ப் பையில் உண்டாகும் கற்களால் சிறுநீர் தடைப்பட்டு சிறுநீர் வெளியேற்றுவதைத் தடுக்கும். இதனால் சிறுநீர் சொட்டுச் சொட்டாக வெளியேறும். எமது சிறுநீர்ப் பையின் கீழாக ப்ரெஸ்றேட் என்ற சுரப்பி ஆண்களுக்கு காணப்படும். இது வயது செல்லச் செல்ல விரிவடையத் தொடங்கிவிடும். அதனால் சிறுநீர் வெளியேறும் பாதையை தடைசெய்துவிடுகின்றபோது சிறுநீர் சொட்டுச் சொட்டாகத்தான் வெளியேறும். மீதமானவை தேங்கி நிற்கின்றது. இதனாலும் கற்கள் உருவாகின்றன. இதற்குக் காரணம் ப்ரெஸ்றேட் வீங்குவதேயாகும். இது வயதானவர்களுக்கு மட்டும்தான் உருவாகும்.

ப்ரெஸ்றேட் வீக்கமானவர்கள் வைத்தியர்களை நாடிச் செல்வார்கள் அவர்களின் முறைப்பாடு எவ்வாறு இருக்கும் என்றால், சிறுநீர் கழிக்கும்போது சிறுநீர் சொட்டுச் சொட்டாக வெளியேறுகின்றது, ஒரு எரிவுத்தன்மையும் உருவாகின்றது, இடையிடையே அடைப்பும் ஏற்படுகின்றது என்று கூறுவார்கள்.

சிறுநீர்ப் பாதையில் உண்டாகும் கற்கள் ஆணுறுப்பின் பாதையிலும், பெண்ணுறுப்பின் பாதையிலும் அடைத்துவிடும். அவ்வாறு அடைத்துவிட்டால் சிறுநீரை வெளியேற்ற முடியாது. யுரீத்ராவில் கற்கள் தடையாக உருவாகி விட்டாலோ அல்லது சிறுநீர் போய்க் கொண்டிருக்கும்பொழுது திடீரென்று நின்று விட்டாலோ சிறுநீர்ப் பையில் கற்கள் இருப்பதற்கான அடையாளங்களாகும்.

இவ்வாறு எந்தவித அறிகுறிகளும் இல்லாமல் வழக்கமாக உடலைப் பரிசோதிக்கும்போது தற்செயலாகக் கண்டுபிடிக்கப்படலாம் அல்லது வேறு ஏதோ காரணத்திற்காக உடலை பரிசோதிக்கும்போதும் கண்டுபிடிக்கப்படலாம்.

சிறுநீரகத்தில் சிறிய கற்கள் இருக்குமாக இருந்தால் மருந்துகள் மூலம் அதனை வெளியேற்றக் கூடியதாக இருக்கும். பெரிய கற்களை அகற்றுவதாக இருந்தால் அதற்கு பல வகையான முறைகள் இருக்கின்றன. அதனடிப்படையில் எங்களின் சிகிச்சைகளை முன்னெடுப்போம்.

மருத்துவ உலகுக்கு மிக மிக அண்மையில் அறிமுகமான திறன்மிக்க இன்னும் ஒருமுறை இருக்கின்றது. அதன் மூலம் வெட்டுவதுமில்லை, துளையிடுவதுமில்லை. அது எவ்வாறென்றால், ESWL (*Extra Coporeal Shock Wave Lithotripsy*) என்ற கருவி மூலமாக கதிர்களை உட்செலுத்தி அதிர்வலைகள் ஊடாக கற்களை உடைத்து சிறுநீருடன் வெளியேற்றச் செய்யும் முறையாகும். இதன் மூலம் மிகப்பெரிய கற்களையோ அல்லது மிகச் சிறிய கற்களையோ உடைக்க முடியாது. ஓரளவான 1.5 சென்றி மீற்றருக்கும் குறைவான அளவுள்ள கற்களை மட்டுமே அகற்றலாம்.

தொழிநுட்பம் வளர்ந்து வரும் இக்காலகட்டத்தில் உடலை அறுத்து செய்யப்படும் அறுவைச் சிகிச்சைகள் மிக மிகக் குறைந்து விட்டன. இப்போதெல்லாம் மிக அரிதாகவே அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. மிகவும் சிக்கலான தருணங்களிலேயே முன்னெடுக்கப்படுகின்றது.

**கேள்வி: சிறுநீரகத்தில் கற்கள் உருவாகுவதை தடுக்கும் வழி முறைகள் என்ன?**

பதில்: ஒவ்வொரு நாளும் ஆகக் குறைந்தது 3 லீற்றர் தண்ணீரை குடித்து வரவேண்டும், சிறுநீரை அடக்கி வைப்பதை தவிர்த்துக்கொள்ளவேண்டும், உரிய நேரத்துக்கு சிறுநீரை கழித்துவிடவேண்டும். இதை முறையாக நாம் செய்து வருவோமாக இருந்தால் சிறுநீரகத்தில் கற்கள் விளைவதை தடுத்துக்கொள்வதுடன் எமது சிறுநீரகத்தையும் பாதுகாத்துக்கொள்ளலாம்.



டொக்டர் ஐ. பிரபாத் பத்திரன



# கசக்கும் இனிப்பு

## கந்தளாய் சீனித்தொழில்சாலையை அழிக்கும் அரசியல்



எப். முபாரக்

இலங்கையில் காணப்படும் பல்வேறு தொழிற்சாலைகளில், சீனித்தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் செவனகல, ஹிங்குரான, கந்தளாய் ஆகிய சீனித்தொழிற்சாலைகள் காணப்படுகின்றன.

இதில், திருகோணமலை மாவட்டத்தில் சேருவில தேர்தல் தொகுதியில் கந்தளாய் பிரதேசத்தில் அமையப்பெற்றது தான் கந்தளாய் சீனித்தொழில்சாலை. இத்தொழிற்சாலை 1960ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி அப்போதைய பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அப்போது மூடிய பொருளாதார திட்டத்தின் மூலம், வளங்களை நாட்டிலே உற்பத்தி செய்வது போன்ற செயற்றிட்ட நோக்கத்தின் மூலமே கந்தளாய் சீனித்தொழில்சாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. சுமார் 20,000 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு செய்கைபண்ணப்பட்டு சீனி உற்பத்திகள் இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டன. சுமார், 6,000க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டு, கந்தளாய் சீனித்தொழில்சாலை இயங்கியது.

கந்தளாய் சீனித்தொழிற்சாலை, 33 வருடங்கள் இயங்கிய நிலையில் 1993 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், இத் தொழிற்சாலையை மூடியது. அன்றிலிருந்து இன்று வரை தொழில்சாலையின் அனைத்து செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டன. தற்போது சுமார் 28 வருடகாலமாக, எந்தவிதமான செயற்பாடுகளும் இன்றி கோடிக்கணக்கான பெறுமதியான இயந்திரங்கள் துருப்பிடித்த நிலையில், பாவிக்க முடியாத சூழ்நிலையில் உள்ளன.

1993 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஒவ்வோர் அரசாங்கமும் தமது தேர்தல் பிரசார யுக்தியாக “நாம் ஆட்சிபீடம் ஏறியவுடன் கந்தளாய் சீனித்தொழில்சாலையை ஆரம்பித்து, கந்தளாய் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவோம்” என எந்தக் கட்சியும் கூறாமலில்லை.

எம்.ஜி.சீனி நிறுவனம் ஒன்று கடந்த நல்லாட்சி அரசாங்கத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், 500 ஏக்கர் காணியைப் பெற்று வேறு பயிர்ச்செய்கைகளை செய்து வருகின்றனர்.

தற்போதும், கந்தளாய் சீனித்தொழில்சாலையில் 33 ஊழியர்கள் பாதுகாப்பு ஊழியர்களாக கடமையாற்றி வருகின்றார்கள். அவர்களுக்கான சம்பளம், கிரமமான முறையில் கிடைப்பதில்லையெனவும் ஒரு மாதம் விட்டுத் தான் கிடைப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் சீனித்தொழில்சாலை வளாகத்தில் பத்துக்கும் மேற்பட்ட லொறிகள், பெக்கோ இயந்திரங்கள் தள்ளும் இயந்திரங்கள், டோசர் இயந்திரங்கள் என பல மில்லியன் ரூபாய் பெறுமதியான இயந்திரங்கள் துருப்பிடித்த நிலையில் வெய்யிலிலும், மழையிலும் 28 வருடங்களாக உள்ளன.

சீனித்தொழில்சாலைக்குரிய இரும்புகளை இனந்தெரியாதோர் திருடிச் செல்வது, வாகனங்களில் சென்று இரும்புகளை கடத்திச் செல்வது போன்ற சட்டவிரோத செயற்பாடுகளும் நடந்துகொண்டே இருக்கின்றன.

“கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால், கந்தளாய் சீனித்தொழிற்சாலையை ஆரம்பிப்பதாகத் தெரிவித்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. அதன் பிற்பாடு, 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் கந்தளாய் சீனித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என தற்போதைய ஜனாதிபதியின் அரசாங்கம் தெரிவித்தும் இதுவரைக்கும் ஒன்றும் நடைபெறவில்லை.

வீணாக கிடந்து துருப்பிடிக்கின்ற இரும்புப் பொருட்களை, அரசாங்கம் ஏலத்தில் விட்டு, அதனை கொண்டு சாத்வீக ரீதியிலான வேலைத்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். 28 வருடங்களாகப் பாவிக்காத இயந்திரங்களை, மீண்டும் பாவனைக்கு சரி செய்வதும் இயலாத காரியமாகும்.

எனவே, அரசாங்கம் கந்தளாய் சீனித்தொழிற்சாலைக்குரிய காணிகளை பொது மக்களுக்கு, வேறு பயிர்ச் செய்கைகள் மேற்கொள்வதற்கு வழங்கி வளப்படுத்த முயற்சிக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், புதிய திட்டங்களினூடாக இந்நிலங்களைப் பயன்படுத்த வேண்டும்.

கந்தளாய் சீனித்தொழில்சாலைக்குரிய விவசாய குளங்கள் காணப்படுகின்றன. ஒவ்வோர் எல்லைகளை மையப்படுத்தி 12,15,16,18 குளங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு குளத்தையும் மையப்படுத்தி, 2,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் கரும்புச் செய்கைகள் மேற்கொள்ள முடியும். தற்போது இக்குளங்களும் நீர் வன்றி பிரயோசனமற்ற நிலையில் காணப்படுகின்றன. இவ்வாறு கந்தளாய் சீனித்தொழிற்சாலைகுரிய நிலங்களில் பௌதீக ரீதியிலான வளங்கள் காணப்படுகின்றன. அதனை மழுங்கடிக்காமல் பயன்படுத்த வேண்டும்.

நாட்டினை ஆட்சி செய்கின்ற எந்த அரசாங்கமாக இருந்தாலும், இனிமேலும் மக்களுக்கு வாக்குறுதிகளை மட்டும் அள்ளி வீசாமல், செயல் வடிவில் வெளிக்காட்ட முயற்சிக்க வேண்டும்.









# அரிசி மலை இரகசியம்



ஹஸ்பர் ஏ ஹலீம்





கிழக்கு மாகாணம் இயற்கை வளங்களால் அழகு பெறும் ஒரு மாகாணம். அதில் திருகோணமலை மாவட்டமும் இயற்கையினை மேலும் அழகு பெறச் செய்கிறது. சுற்றுலாத் தளங்களின் ஒரு பகுதியாக புல்மோட்டை அரிசி மலை காணப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள பகுதியே அரிசிமலை பகுதி. பபளபளப்பான அரிசி போன்ற கற்கள் நிறைந்த இலங்கையின் விசித்திரமான கடற்கரை பிரதேசமாக இது விளங்குகிறது.

திருகோணமலை நகர் பகுதியில் இருந்து சுமார் 56 கிலோ மீற்றர் தொலைவில் இவ் அரிசி மலை பிரதேசம் காணப்படுவதுடன், புல்மோட்டை முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ளது. கடல் பாறைகளை கொண்டு அழகாக காட்சியளிக்கும் இவ்வாறான இடங்களை, உள்ளூர், வெளிநாடு சுற்றுலாப் பயணிகள் அதிகம் அதிகம் பார்வையிட்டு வருகின்றனர்.

ஆனாலும் தற்போதைய கொவிட்-19 காலம் அதற்கு சரியாக இடம் கொடுக்கவில்லை. மலைப்பாங்கு காட்டு வழியாக சென்று, இந்த அரிசி மலை கடல் பரப்பை அடையமுடியும். இயற்கை எழில் கொஞ்சும் இடமாக அரசி போன்ற மண் வளத்தை கொண்டு காணப்படுகிறது. இங்கு ஆழம் குறைந்த பகுதியாகையால் நீராடவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

இலங்கை கடற் படையின் கட்டுப்பாட்டுக்குள் பராமரிக்கப்பட்டு வரும் இப்பிரதேசம், வரலாற்று ரீதியாக பெயர் போன தளமாக மாறியுள்ளது. இந்த பிரதேச எல்லையை அடைய, உரிய பிரதான வீதி வழியாக மலைப்பாங்கினுடாக இயற்கையை ரசித்து, 150 மீற்றர் தூரம் தொலைவில் உள்ளதை காட்சிகளாக காணலாம்.

இந்த கரையோரம் அண்ணளவாக 100 மீற்றர் வரையான நீளமுடையதாக காணப்படுகிறது. பொன்மாலைக் குடா கிராமத்தை அண்டிய இப்பகுதியில் முஸ்லிம்களும் பெரும்பான்மை இனத்தவர்களும் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த பகுதிக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள், உரிய கடற் பரப்பில் குளிப்பதற்காக ஈடுபடுகின்றபோதும் முறையான பாதுகாப்பு இன்மை ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இவ்வாறான சுற்றுலாப் பகுதிகள் பாரிய பங்களிப்புச் செய்கிறது.

இவ்வாறான சுற்றுலா தளங்களை எதிர்காலத்தில் புனித பூமியாக மாற்றினாலோ இல்லாது தொல் பொருள் என்கின்ற பேரில் வேறு பெயர்களை வைத்து சுவீகரிப்பு இடம் பெறலாம் எனவும் அதனை சுற்றியுள்ள சிறுபான்மை சமூகத்தினர் அங்கலாய்க்கின்றனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான பகுதிகளை அபிவிருத்தி செய்வதனால் மேலும் பல நன்மைகளை அடையலாம். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்தல் மற்றும் சர்வதேச தரத்துக்கு கொண்டு செல்லுதல் ஊடாக அந்த கிராமமும் வளர்ச்சியடைய முடியும். அரசி மலை என்பது வரலாற்று ரீதியாக புகழ் பெற்ற பிரதேசமாக மாறி வருகிறது. இலங்கை கனிய மணல் என்பதும் இதனை அண்டிய புல்மோட்டை பகுதியில் உள்ளது. எப்படியாக இருந்தாலும் மனம் கவர் இயற்கை எழில் கொஞ்சும் தேசமாக, அரசி மலையை தொடர்ந்தும் மாற்றியமைக்க வேண்டும். நாலா புறங்களில் மலைகளை காடுகளை கொண்ட இப் பிரதேசத்தை சுற்றிய பகுதி எம்மவர்களை ஈர்க்கின்றது.

இயற்கையை ரசிப்பதற்கு மட்டுமல்ல, மானுடம் வாழ்வதற்கும் தான் என்ற நிலையை உருவாக்கியுள்ளது. தற்போதைய அசாதாரண நிலை காரணமாக பயணிகளின் வருகை மிகக் குறைவாக உள்ளது .

கரையோரப் பகுதிகளில் ஆச்சரியமான தளமாக இதனை காண முடியும். எம்மவர்களின் சிறப்பான பார்வை பாதுகாப்பு உரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு பராமரிப்பதன் ஊடாக மேலும் அபிவிருத்தி அடையச் செய்யலாம். அபிவிருத்தி என்கின்ற போர்வையில் இயற்கை வளங்களை அழிக்காமல் பாதுகாக்கப்படவேண்டும்.

பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்த வேண்டும். பயணிகளை மேலும் கவருவதற்காக வழி காட்டி படங்களை வீதி வழிகளில் அமைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் .

இயற்கை வளங்களை பாதுகாத்து இயற்கையின் பகுதியாக ரசிப்பதற்கு திருகோணமலை மாவட்டம் ஒரு வரலாற்று சான்று. இது போன்று நாட்டின் அந்நியச் செலாவணியை அதிகரிக்க, பாரிய பங்குகளை சுற்றுலாத் துறை தருகின்றது.

இலங்கை தேசம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒன்றாக காணப்படுகிறது. நாலாப் புறங்களும் கடலால் சூழப்பட்ட ஒருதீவு. இதனை மையமாக வைத்து, இந்தப் புல்மோட்டை அரிசி மலை விளங்குகிறது.

உலகின் இயற்கை துறை முகங்களில் ஒன்றாக திருகோணமலை துறை முகம் விளங்குகிறது. இதனோடு இணைந்த பின்னிப் பிணைந்த கடல் பரப்பின் இணைந்ததாக அரிசி மலை பகுதி விளங்குகிறது.

நமது நாட்டில் இதனை தரிசிப்பதற்காக மேல் மாகாணம், மத்திய மாகாணம் உட்பட வடக்கு, கிழக்கு மக்கள் படை யெடுக்கிறார்கள். ஆனால், தற்போதைய சூழ் நிலை இடம் கொடுக்கவில்லை.

இதனை அண்டிய பகுதியில் உள்ள சுமார் 500 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட நடவடிக்கைகள் முன்னர் இடம் பெற்றதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். புனித பூமியாக்க திட்டங்களை சாத்தியமாக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இயற்கையை பாதுகாக்க நாம் அனைவரும் முன்வரவேண்டும். நாளைய சந்ததிகளின் கைகளில் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.



# சிற்பங்களுக்குள் ஒழிந்திருக்கும் வாழ்வாதாரம்



வ. சக்தி









"நாம் ஆரம்பத்தில் களிமண்ணால் பொம்மைகளையும் உருவங்களையும் வடிவமைக்க பழகினோம். அதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு, தற்போது அலங்காரப் பொருட்களையும் சிலைகளையும் களிமண், பைபர் போன்ற மூலப் பொருட்களைக் கொண்டு வடிவமைக்கக் கற்றுக் கொண்டோம். இதிலாவது எமது வாழ்வாதாரத்தைப் பெருக்கலாம் என நினைத்துக் கொண்டுதான், நாம் இதில் காலடியெடுத்து வைத்தோம். ஆரம்பத்தில் எமக்கு ஓரளவு வருமானம் கிடைத்தது. ஆனால், தற்போது எமது நிலைமை தொடர்பில் யாரிடம் போய் சொல்வது எனத் தெரியாதுள்ளது" என மட்டக்களப்பு மாவட்டம் பெரியபோரதீவு கிராமத்தில் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்டு வரும் அலங்கார பொம்மை உற்பத்தியாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கும்போது, கொவிட் - 19 நிலைமை காரணமாக, நாம் உற்பத்தி செய்யும் சிலைகளுக்கான மூலப் பொருட்களைப் பெறுவதில் பல சவால்கள் உள்ளன. அவற்றுக்கு அதிக விலையாகவும் உள்ளன. இவற்றின் மூலப் பொருளான ஒரு கிலோ பைபர் 500 ரூபாவாகவுள்ளது, இது ஒருபுறமிருக்க, இந்தியா, சீனா போன்ற பல நாடுகளில் எம்மைப்போன்ற கிராமியத் தொழிலாளர்களுக்கு அங்குள்ள அரசும், அரச சார்பற்ற அமைப்புகளும், பல்வறு உதவிகளையும் பயிற்சிகளையும், வழங்குகின்றன. எமக்குத் தற்போதைய நிலையில் மூலதனம், இதனை மேற்கொள்வதற்குரிய இயந்திர வசதிகள், உள்நாட்டு, வெளிநாடுகளுக்கான ஏற்றுமதிகள், தேவையாகவுள்ளன என்றனர்.

பிரதேச மட்டங்களில், குடிசைக் கைத்தொழில்களாக மேற்கொள்ளும், தொழிலாளர்கள் காலத்துக்குக் காலம் அவ்வப்போது வரும் இடர்களாலும் இன்னல்களாலும், அவர்கள் பெறும் வருமானங்களை இழக்கச் செய்கின்றார்கள்.

கொவிட் - 19 பெரும்தொற்றுக் காரணத்தால், அலங்கார சிலைகள், பொம்மைகள், உருவங்கள் செய்து விற்பனை செய்யும் பெரியபோரதீவு, களுதாவளை, களுவாஞ்சிகுடி பிரதேச அலங்கார உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, நாளாந்தம் இச்சிலைகளை செய்து விற்பனை செய்யும் கைப்பணியாளர்கள் தமது நாளாந்த வருமானத்தை ஈட்ட முடியாமலுள்ளார்கள். வெளி மாவட்டங்களுக்கு தமது உற்பத்தி பொருட்களை அனுப்ப முடியாமலுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

களுதாவளை பிரதேசத்தில் உள்ள சிலை செய்வர்கள், சீமெந்தை மூலப் பொருளாக கொண்டு சிலைகளை செய்வதுடன் சகல சிலைகளும் கைகளாலேயே செய்து வருகின்றனர்.அவர்கள் இறை வழிபாட்டிற்குரிய திருவுருவங்கள், அலங்கார பொம்மைகள், அழகுபடுத்தும் பொருட்கள் ஆகியவற்றைச் செய்வதுடன், பரம்பரை பரம்பரையாக இச்சிலைகள் வடிக்கும் கலையைக் கற்றுச் செய்வதாக கூறுகிறார்கள்.

பெரியபோரதீவு பகுதியில் சிலை செய்யும் தொழிலை, ஒர் இடத்தில் தமது வாழ்வாதார மேம்பாட்டு தொழிலாக 20 இற்கு மேற்பட்ட பெண்கள் செய்து வருகின்றனர். குறிப்பாக இவர்கள் களிமண், டொலமைற் பவுடர், பைபர் போன்ற மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிற வர்ணங்களைக் கொண்டு இறை வழிபாட்டு உருவங்கள், கலாசார உருவங்கள், நினைவுச் சின்னங்கள், சிலைகள் போன்றவற்றை உற்பத்தி செய்து வருகின்றனர்.

கொரோனா தொற்று காரணமாக, தமது உற்பத்திகளை செய்வதற்கான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் காணப்படுவதாகவும், தாம் உற்பத்தி செய்யும் சிலைகளை கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற மிகத் தொலைவிலுள்ள மாவட்டங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் விற்பனை செய்து வரும் இந்நிலையில், இடை நடுவில் கொவிட் - 19 காரணத்தால் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யவோ, விற்பனை செய்யவோ முடியாமல், அவைகள் அனைத்தும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் தமது வாழ்வாதாரம் அடியோடு மூழ்கிவிட்டதாகவும் அக்கைவினைக் கலைஞர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் சீமெந்தை மூலப் பொருளாக கொண்டு அச்சுகள் மூலமாக சிலையை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள், அலங்கார உருவங்கள், கட்டட அலங்கார பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதுடன் தமது பிரதேசத்தில் கொவிட் - 19 காரணத்தால், அப்பகுதியிலும், அவ்வப்போது பயணத்தடை இடம்பெறுதால் தாம் உற்பத்தி செய்த பொருட்கள் நீண்ட நாள்களாக விற்பனை செய்ய முடியாமல் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்படுகின்ற அலங்காரச் சிலைகள், பொம்மைகள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் மாதாந்தம் 12,000 ரூபாய் தொடக்கம், 15,000 ரூபாய் வரைத்தான் வேதனம் பெறுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வரைக்கும் அரசால் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள், இவ்வாறாக கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் குடிசைக் கைத்தொழில்களையும் விருத்தி செய்து கொடுக்க வேண்டியது துறைசார்ந்த அதிகாரிகளினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் தலையாய கடமையல்லவா?

இது ஒருபுறமிருக்க இவ்வாறு தமது பெரும் சிரமத்திற்கு மத்தியிலும், முயற்சியின் மத்தியிலும் தமக்குத் தெரிந்த இத்தொழிலை மேற்கொள்ளும் தமக்கு தற்கால நவீனத்துவத்திற்கு ஏற்ற வகையில் துறைசார்ந்த பயிற்சிகளையும், அவற்றுக்குரிய நவீனத்துவ இயந்திரங்களையும் அதிகாரிகள் வழங்க வேண்டும். இதுவரையில். தமங்கு அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களோ எதுவித உந்துசக்தியையும் வழங்காத நிலையில் ஏனைய துறைகளுக்கு உதவுவதுபோல் தமது சிற்பக் கலையுடனான வாழ்வாதாரத்திற்கும் சம்மந்தப்பட்டவர்கள் உதவுவதற்கு முன்வரவேண்டும்.

'தமிழ் மிரர்' ஊடகம் வாயிலாகவேனும் எமது நிலைமையை அறிந்து கொண்டு எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும், தம்மீது கரிசனை கொள்ள வேண்டும், என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு அதிகளவு தன்னார்வ தொண்டர் அமைப்புகள் பல சமூகசேவைகளையும், நலிவுற்ற மக்களின் வாழ்வாதார மேபாட்டிற்கும் உதவிவருவதாகவும் நாம் அறிகின்றோம். கிராமிய மட்டத்தில் எமக்குத் தெரிந்த உற்பத்திகளை மேற்கொண்டு அதனூடாக சிறிதளவேனும் வருமானமீட்டிவரும் எமக்கு புலம்பெயர் அமைப்புகளும் உதவ முன்வரவேண்டும். எமது படைப்புகளை புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் கொள்வனவு செய்யும் பட்சத்தில் எமது வாழ்வாதாரம் மேலும் மேம்படும் என எதிர்பார்ப்பதாகவும் அந்த சிற்பக் கலைஞர்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் வாழ்வாதார உற்பத்திகளுக்கு உந்துசக்தியளிக்கப்படும் பட்சத்தில் துறைசார்ந்த மக்களின் வாழ்வாதாரம் மேலோங்கி வருமானமும் அதிகரிக்கும்.

இதனூடாக கிராமிய பொருளாதாரமும் ஆங்காங்கே விருத்தியடைந்து செல்லும் என்றால் அது மிகையாகாது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 14 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.